www.akaram.eu

AKARAM

# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 9.03 திருவள்ளுவர் ஆண்டு 2052 | 14.08.2021 - 13.09.2021 | ISSN : 2195-6480

FREE Magazine



## காசிக்கு 2வது வட்டுக் கோட்டைத் தீர்மானம் எதற்கு?



## மீண்டும் காட்டிக் கொடுப்புகள் திட்டமிடப்படுகின்றனவா...



## ஆப்கானிஸ்தானும் அதன் அவலங்களும்

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


INNENSTADT WEST
ortel MOBILE
DORTMUND
தமிழர் தெருவிழா
2021
மாபெரும் ஆடல் பாடல் கொண்டாட்டம்....
Strassenfest der Tamilen
04. & 05. SEP 21
Dortmunder U
Park der Partnerstädte
Bundesstraße 54
Westentor
Rheinische Str.
DORTMUNDER U - Park der Partnerstädte
Sa. 11:00 - 22:00 Uhr
So. 12:00 - 18:00 Uhr
தமிழர் அரங்கம்
Kulturbüro
Stadt Dortmund Kulturbetriebe
VMDO
Der Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e. V.
HOUSE OF RESOURCES
Tamilischer Kultur Do
TKD
தமிழ் கலையகம்
Bildung
Begegnung
Beratung
Stadtteil-Schule Dortmund e.V.
Bildung - Beratung - Begegnung
comdu.it Deutschland
samo.fa
SIVANDIGITAL SOUND&MORE
ஊடகஅனுசரணை
வெற்றிமணி
அகரம்
IBC தமிழ்
GTV
தமிழ் MTV
STS தமிழ் TV
Lankasri
ETR
0151 633 633 33 | 0162 803 1647 | 0157 7351 7849 | 0177 679 4261 | 0151 27 990 990

TREUE + BONUS 2)

ortel MOBILE



SMART WORLD

**20 countries**
**250 minutes**

250 minutes from Germany to 20 countries

250 minutes from Germany to Eu

Internet Flat Highspeed up to 8GB

Surf and make calls within the EU

National Flat call rate

Now for 4weeks for "
**19,99€***

# OHNE PAUSE NACH HAUSE.




Ortel. Wir sprechen Deine Sprache.

Google play | Available on the App Store

Aufladbar mit: ortel MOBILE O2 e-plus+

Ortel Mobile GmbH, E-Plus-Straße 1, 40472 Düsseldorf. Nutzungsvoraussetzung: Erwerb eines Starterpaket (UVP 9,95 €). Standardtarif: Innerdeutsche Gespräche: 9 Cent/Min., Gespräche ins Ausland ab 1 Cent/Minute. Gespräche jeweils zzgl. einmaliger Verbindungsgebühr von max. 15 Cent je Gespräch möglich (alle Preise unter www.ortelmobile.de). SMS 15 Cent. 49 Cent/MB. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Datengeschwindigkeiten innerhalb Deutschlands und in der EU von bis zu 21,6 MBit/s (Download) und 8,6 Mbit/s (Upload). Bei den angegebenen Geschwindigkeiten handelt es sich um die jeweils technisch mögliche Maximalgeschwindigkeit. Die tatsächlich erreichte Durchschnittsgeschwindigkeit kann davon abweichen. Taktung 100 KB Schritte. 1) World Flat (24,99€ pro 28 Tage Optionslaufzeit zubuchbar zum Standardtarif): Unbegrenzte Minuten aus Deutschland in die EU, sowie Gespräche aus Deutschland in alle Netze von Bangladesch, Brasilien, Chile, China, Hongkong, Indien, Indonesien, Japan, Kanada, Malaysia, Puerto Rico, Singapur, Südkorea, Thailand, USA sowie in die Festnetze von Kasachstan, Russland, Slowenien. Dazu eine Flatrate für Gespräche in alle deutschen Netze. Dies gilt auch für Telefonate innerhalb der EU und aus der EU nach Deutschland. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Außerhalb der Inklusivleistung gelten die üblichen Konditionen Ihres Tarifs. Die Verlängerung erfolgt bei ausreichendem Guthaben automatisch, wenn die Option nicht zum Ende der jeweiligen Laufzeit gekündigt wird. 2) Verlängerung 19,99 €/28 Tage.




AKARAM

அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 ஆவணி 2021 - 13 புரட்டாசி 2021

சுவடி / ISSUE 9.03



**தலைமை ஆசிரியர்**

திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**

திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**

திரு. பவித்திரன் (இலங்கை)

திரு. தயாபரன் (இலங்கை)

திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)

திரு. சண் தவராஜா (சுவிஸ்)

திரு. அறிவழகன் (ஜெர்மனி)

**நிழற்படப் பிரிவு**

திரு. வியாசன்

செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**

திரு. அர்ஜுன் (ஜெர்மனி)



**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. BOX 4153, 59037 Hamm**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu



ISSN 2195-6480

**www.akaram.eu**



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் பணிவான வணக்கம்.**

# "விழித்தெழுவோம் வீணர்களை வீழ்த்துவோம்"

தமிழ் இனத்தின் அனைத்துத் துன்ப துயரங்களுக்கும் எம் இனத்தின் அரசியல் தலைவர்கள்தான் காரணம் என்பதை, 2009 மே தமிழ் இன அழிப்புப் போரின் அவல முடிவும், அதன் பின்னரான தொடரும் அரசின் இராணுவப் புதை பொருள் திணைக் களம், கலாச்சார அமைச்சின் புத்த விகாரைகள், சிங்கள குடியேற்றங்கள் போன்ற கட்டமைப்புகள் ரீதியான செயற்பாடுகளும் தமிழ் இன அழிப்புக் கட்டுப்பாடின்றி அமுலாக்கப் படுவதைக் காட்டுகின்றன.

கடந்த 12 வருடங்களாக சம்பந்தன், சுமந்திரன்,மாவை, சிறிதரன் தலைமையினால் வழி நடத்தப்படும் அரசியல் தலைமை எந்த வித போர்க் குற்ற விசாரணைகளும், நீதி விசாரணைகளும் இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச அரங்குகளில் இடம் பெறாமல் பாதுகாத்து வந்துள்ளது.

இப்பொழுது ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவில் மேற்குலக மற்றும் சில நடுநிலை அரசுகளின் ஆதரவால், எம் இனத்துக்கு இழைக்கப்பட்ட அநீதியை, அரசின் பொறுப்புக் கூறலை, சர்வதேச புவிசார் அரசியல் காரணங்களால் என்றாலும் கூடச் சிங்கள அரசுக்கு சில நெருக்கடிகளைக் கொடுத்து வரும் நிலையில், கவிஞர் திரு. காசி ஆனந்தன் தமிழக அரசியலில் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சி வெற்றி பெறவேண்டும் என்பதற்காக, எம் இனத்தின்

அரசியல் அபிலாசையான 1976ல் எடுக்கப்பட்ட வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை சீரழிக்கும் அரசியலைச் செய்து வருகிறார்.

இப்படியான கருத்துகளை 'லங்னகா சிறி' கட்டுரையும் முன்வைத்துப் பிரச்சாரம் செய்கிறது. காசி ஆனந்தன் உண்மையாகவே இந்திய அரசின் சிறைக் கைதி. அண்மையில் அவரே முன்னாள் தமிழ் மாநில பா.ஜ.க. தலைவியும், கோவைச் சட்டமன்ற, சட்டசபை உறுப்பினருமான திருமதி.வானதி சீனிவாசன் தலைமையில் இலங்கைத் தமிழர்கள் இந்துக்கள், அவர்களை காப்பாற்றுங்கள் என்று முதலைக் கண்ணீர் வடிக்கிறார். இந்துத் தீவிரவாதம் பேசுகிறார்.

இத்தனை ஆண்டுகளாக வராத இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பான கவலையால், அவர் ரொம்பவே புத்தி பேதலித்தவராகப் பிதற்றுகிறார். அவர் தொடர்பான விமர்சனங்களை இந்த இதழ் விபரமாக தருகிறது.

2010ல் இருந்தே தமிழரசுக் கட்சியின் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழின அழிப்பை இலங்கை இந்திய அரசுகள் செய்ய வசதியாகத் தமிழீழ விடுதலைப் புலிகளையும் 1,75,000 பொது மக்களையும் கொன்று குவிக்கத் துணை போனவர்கள் என்கிற குற்றச்சாட்டை அகரம்' சுமத்தியே வந்துள்ளது.

இன்று காசி ஆனந்தனின் நடவடிக்கைகள், புலிகளைக் காட்டிக் கொடுத்தே உயிர் தப்பினார் என்பது உறுதியாகிறது. புரட்சிக் கவிஞர் புதுவை இரத்தினதுரைக்கும், ஈரோஸ் தலைவர் பாலகுமாரனுக்கும் கிடைக்காத வாழ்வைக் காசி ஆனந்தன் காட்டிக் கொடுத்தே பெற்றார் என்கிற உண்மை வெளியாகி விட்டது.

எமது அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மட்டும் அல்ல, அவற்றின் ஆதரவாளர்களாகப் புலத்தில் செயற்படும் தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களும் தமது கட்சித் தலைமைகளுக்கு அவர்கள் விசுவாசமாகப் பிளவுபட்ட அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் இனத்தின் அழிவை செய்கிறார்கள்.

எனவே, மக்கள் நாம் விழிப்புடன் இருக்காது விட்டால், நம் இனத்தை நம் துரோகிகளே அழித்து விடுவார்கள்.

விழித்தெழுவோம் வீணர்களை வீழ்த்துவோம்.

**ஆசிரியர்,** அகரம் குழுமம்



**த. எதிர்மன்னசிங்கம்**

**என்ன செய்து இந்த அரசியல் தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தந்தது? என்பதை எமது தமிழ் மக்களின் 75 வருட சுதந்திர இலங்கையின் வரலாறு காட்டும்.**



# மீண்டும் காட்டிக் கொடுப்புகள் திட்டமிடப் படுகின்றனவா?

அமெரிக்கத் தூதுவருடன் தமிழர்களின் அரசியல் ஏகத் தலைவர்கள் என உரிமை கொண்டாடும் தமிழர் தேசியக் கூட்டமைப்பு எனப் பெருமைப்படும் கூட்டம் ஒன்று இராச வரோதயன் சம்பந்தன், மரியாம் பிள்ளை, சுமந்திரன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கல நாதன் ஆகியோர் திடீர் என இலங்கையின் அமெரிக்க தூதுவரை அண்மையில் சந்தித்ததாக ஒரு பத்திரிகைச் செய்தி ஒளிப் படத்துடன் வெளியிட்டது. அதில் வெளியான படம்தான் இங்கே வெளியாகிறது.

இந்தக் கூட்டம் நடந்த திகதி குறிப்பிடப்படவில்லை. வழமைபோல கூட்டமைப்பு நடத்தும் இதுபோன்ற சந்திப்புகள் பற்றிய செய்திகளை உத்தியோகபூர்வமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்த வரலாறே கிடையாது. தமிழ் மக்கள் பிரச்சினை பற்றிப் பேசினோம், பேசுகிறோம் எனப் பேசிப் பேசியே அரசியல் செய்வது எமது அரசியல் தலைமையின் சாமத்தியம். என்ன செய்து இந்த அரசியல் தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தந்தது? என்பதை எமது தமிழ் மக்களின் 75 வருட சுதந்திர இலங்கையின் வரலாறு காட்டும்.

இவர்களை தமிழ் மக்களின் தலைவர்களாக முன்னிறுத்தி, 2005 தேர்தலில் பாராளுமன்ற மக்கள் பிரதிநிதியாக வெற்றி பெற வைத்தது தமிழ் ஈழ விடுதலைப் புலிகள். புலிகள் அமைப்பு தாம் போரின் மூலம் வெற்றி பெற்று உருவாக்கிய அரசு நோக்கிய புலிகளின் தமிழ் ஈழ அரசுக்கு சர்வதேச அரங்கில் அங்கீகாரம் பெறுவதற்காகவே.

இப்படிப் புலிகள் நம்பிக்கை வைத்து உருவாக்கிய இராச வரோதயன் சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை அரசு விடுதலைப் புலிகளை அழிக்க வசதியாக எந்த வகை எதிர் பரப்புரையும் செய்யாமல் 'வாயே திறக்காமல் மவுனம் காத்தது.'

கடைசி நேரத்தில் புலிகளின் தொலை பேசித் தொடர்புகளைத் துண்டித்து விட்டுப் புலிகளும் 2 இலட்சம் தமிழ் மக்களும் படு கொலை செய்யப்படும் வரை இந்தியாவில் ஒழித்திருந்து விட்டு, 2010 தேர்தலில் இனப்படு கொலை நடத்திய சிங்களப் படைத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேக ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்க வைத்தார்கள்.

எல்லாச் சிங்களத் தலைவர்கள் பின்னாலும் ஓடிப் பிடித்து விளையாடியவர்கள் இப்பொழுது திரிகோண மலை கடற்படைத் தளத்தை அமெரிக்கா பசில் ராஜபக்ச மூலம் எடுக்கும் நிலையில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பு யாருக்காக? எதற்காக நடந்தது? என யார் கேட்டாலும் பதில் கிடைக்காது. அதனால் அகரம் அத்தகைய கேள்வியைக் கேட்காது. ஆனால், தமிழ் அரசுக் கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களிடம் தமிழ் மக்கள், குறிப்பாக அகரம் வாசகர்கள் கட்டாயம் கேட்பார்கள், கேட்கவும் வேண்டும்.


***2009 தமிழ் இன அழிப்புப் போர் நிறுத்தப்பட்டு விட்டதாக அரசு அறிவித்த போதிலும் தமிழர் தேசமும், தமிழ் இனமும் அரசின் கட்டமைப்புகள் ரீதியாக 'இனஅழிப்பு' 12 வருடங்களாகியும் இந்த நிமிடத்திலும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இந்த உண்மையை இந்தக் கூட்டத்தில் பேசினார்களா? இல்லை எனில் வேறு என்ன பேசினார்கள்? அப்படிப் பேசப்பட வேண்டிய தமிழர் பிரச்சனை வேறு என்ன இருக்கிறது? என்பதையும் அவர்களிடமே கேளுங்கள். தமிழர்களுக்கான அரசியல் தீர்வு பற்றிப் பேசினோம் என்றால், என்ன தீர்வைக் கேட்டார்கள் என்பதையாவது வெளியில் சொல்ல வேண்டாமா?***

தமிழ் அரசுக் கட்சியின் சரித்திரத்தில் அதன் அமெரிக்க சார்பு அரசியல் 1960ல் மார்ச் மாத தேர்தலில் தெரிவான அரசைக் கவிழ்த்து, மறுதேர்தல் நடைபெற தந்தை செல்வா தலைமையிலான தமிழ் அரசுக் கட்சி உதவியதன் மூலம் வெளியானது. அது தனது அமெரிக்க சார்பு முதலாளித்துவ கொள்கையினால் பெரும்பான்மைச் சிங்கள பொது மக்களின் வெறுப்பைத் தமிழ் மக்கள் மீது அதிகரிக்க உதவியது. ஒரு பக்கத்தில் அமெரிக்க இந்திய அரசியல் சார்புக் கொள்கையினால் சிங்கள பொது மக்களின் கோபத்தைச் சம்பாதிக்கையில், மறு பக்கம் தமிழ் மக்களின் தேவை அரசியலில் கோட்டை விட்டே வந்தது.

அது எப்படி என்றால், 1948இல் சேனநாயக்க அரசு நிறைவேற்றிய இந்திய பாக்கிஸ்தானிய பிரசைகள் சட்டம் வாயிலாக மலையகத் தமிழரின் வாக்குரிமையைப் பறித்து, 10 இலட்சம் மலையகத் தமிழரின் குடி உரிமையை பறித்தது.

இதன் மூலம் தமிழர் பிரதிநிதிகளின் பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதைத் தமிழர் தலைமை தமிழ் மக்கள் பிரச்சினையாகப் பார்க்கத் தவறியது. அதனால் அந்தச் சட்டம் அரசமைப்புச் சட்ட விதிகளை மீறிய ஒன்றாக இருந்த போதிலும், அதனை நீதி மன்றத்தில் வழக்குப் பதிவு செய்து முறியடிக்கும் வழி இருந்தும், தமிழர் தலைமை திறமை மிக்க ஜீ.ஜீ., செல்வா போன்ற சட்டவாதிகள் இருந்தும் கூட, அச்சட்டத்தை ஏற்கும் அடிமைகளாக மாறினர்.


ஜீ.ஜீ.பொன்னம்பலம்


சா.ஜே.வே. செல்வநாயகம்

இதே நிலைதான் 1956ல் பண்டார நாயக்கா நிறைவேற்றிய தனிச் சிங்கள மொழியும் 1972ல் ஸ்ரீமாவோ நிறைவேற்றிய குடியரசு அரசமைப்புச் சட்டமும். இந்தச் சட்டங்களை முளையிலே கிள்ளி எறிந்திருந்தால் சிங்களம் என்றோ அடங்கிப் போய் விட்டிருக்கும். அன்று தொடக்கம் இன்றுவரை எமது தலைவர்கள் தமிழ்

மக்களுக்கான அரசியலைச் செய்யாமல் வெளிநாடுகளின் அடி ஆள் அரசியலைச் செய்து வருகிறார்கள். இன்று எம் தாய் நிலம் முற்றாக அழிப்பட்ட நிலையை அடைந்து விட்டது.

**சிங்களமும், சீனாவும் தமிழினத்தை அடையாளம் தெரியாமல் அழித்து வருகின்றன. இப்பொழுதும் சம்பந்தன், சுமந்திரன் தலைமையிலான கூட்டம் தமிழ் மக்களுக்கு எதிரான அரசியலைத்தான் இரகசியமாக முன்னெடுத்து வருகிறது. அவர்கள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பேசாமல் இந்திய, அமெரிக்க அரசுகளின் தேவைகளான கொழும்புத் துறைமுக கிழக்கு முனைப் பெட்டகத் துறைமுகம் திரிகோணமலை கடற்படை முகாம் தொடர்பான அரசியலை செய்வதில் முனைப்பாக உள்ளனர்.**

**ஒப்புக்கு ஒன்றுக்கும் உதவாத ராஜீவ் காந்தி ஜே.ஆர் செய்த இலங்கை இந்திய ஒப்பந்தம் வழங்கிய 13வது திருத்தச் சட்டத்தை மீண்டும் தமிழர் தலையில் கட்டிவிட எண்ணுகிறார்கள்.**

**இதற்கு ஆதரவாக தமிழ் நாட்டில் அகதிச் சிறைக் கைதியான கவிஞர் காசி ஆனந்தன், அங்குள்ள தமிழர் எதிர்ப்பு அரசியல் சக்திகளை வைத்து 2 வது வட்டுக் கோட்டைத் தீர்மானம் என்கிற பொம்மைகளின் மாநாட்டை நடத்தி, இந்தியாவிடம் 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைக் கேட்கும் கோமாளிகளின் கூத்தை அண்மையில் அரங்கேற்றி இருக்கிறார்.**

**உணர்ச்சிக் கவிஞரால் வடக்கு கிழக்கு ஒற்றுமை உடைசந்து சொல்லின் செல்வர் எனப் புகழப்பட்ட மட்டக் களப்பு பா.உ., செ.இராசதுரை கட்சியை விட்டு விலகிப் போன வரலாறு வடக்கு கிழக்கு உறவை முற்றாக முறிந்த கதையை யாரும் மறந்துவிட முடியாது.**

சர்வதேச சட்டங்களுக்கு அமைவான தீர்வைச் சர்வதேச சமூகம் ஈழத் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய கட்டாயத்திலும், சர்வதேச புவிசார் அரசியல் மாற்றம் அடைந்து வரும் நிலையிலும் மீண்டும் துரோகிகளின் இனத் துரோக அரசியல் தலை தூக்குவதைப் புலம்பெயர் தமிழர் அரசியல் செயற்பாட்டாளர்கள் என்ன விலை கொடுத்தேனும் முறியடிக்க வேண்டும். இன்னொரு தமிழ் இன அழிப்பை எம் இனம் அனுமதிக்கக் கூடாது, அனுமதிக்கவும் முடியாது.

எவர் என்ன சதிகளைச் செய்தாலும், அவற்றை எல்லாம் முறியடித்து தன்னாட்சி கொண்ட தமிழர் தாயகத்தை மீட்டு எடுப்பதே எமது இறுதி இலக்கும், இலட்சியமும்.




# L·mobi mobile

top up | prices | My L-mobile | International

| Bundle | Details | Price |
|---|---|---|
| 100MB | 50MB + 50MB Gratis | €1 |
| 256MB | 128MB + 128MB Gratis | €2 |
| 512MB | 256MB + 256MB Gratis | €3 |
| 1GB | 512MB + 512MB Gratis | €4 |
| 2GB | 1GB + 1GB Gratis | €5 |
| 3GB | 1.5GB + 1.5GB Gratis | €6 |
| 4GB | 2GB + 2GB Gratis | €6,50 |
| 5GB | 2.5GB + 2.5GB Gratis | €7 |
| 6GB | 3GB + 3GB Gratis | €7,50 |
| 7GB | 3.5GB + 3.5GB Gratis | €8 |
| 8GB | 4GB + 4GB Gratis | €8,50 |
| 10GB | 5GB + 5GB Gratis | €9 |
| 12GB | 6GB + 6GB Gratis | €11 |
| 15GB | 7.5GB + 7.5GB Gratis | €13 |

Maandelijks opzegbaar
Geen aansluitkosten
Geen BKR controle

gratis simkaart | maand bundel | jaar bundel

Action! get 2= pay 1
With an annual bundle
worth 24.95
Get the 2nd SIM card for

**FREE!**

# A whole year for a fixed price!

**Reliable, affordable, accessible. For everyone.**



+31 20 363 62 31
cs@l-mobi.nl

Website : www.l-mobimobile.nl

Amstel Business Park Entrada 204,
1114 AA Amsterdam

*Available at*

JUMBO · coop · AKO · recharge.com · SENIORSTORE.NL · bp · OPWAARDEREN.NL · BELTEGOED.NL · Phone House · Primera · tele combinatie · BCC · OPTIE 1 Smart Living · SPAR · MCD mijn supermarkt




# தமிழர் வரலாற்றைச் சிதைக்கும் வஞ்சகர்கள்

> **தமிழர்கள் மீது வீதிவீதியாகச் சிங்களவர்களால் கொளுத்தப்பட்ட நிகழ்வை "இனக் கலவரம்" என எழுதி வைத்திருக்கிறார்கள். அப்படியாயின் இன அழிப்பு என்பது என்ன? அது எப்போது நிகழ்ந்தது? என எதிர்காலச் சந்ததி நம்மைக் கேட்கப் போகின்ற நிலையை இவர்களே உருவாக்குகிறார்கள் என்பது இங்கே தெளிவாகப் புலப்படுகிறது.**

கடந்த 05.06.2021 அன்று யேர்மனி மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும், கனடாவிலும் மேம்படுத்தப்பட்ட பாடநூல் என்ற பெயரோடு, "அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை" எனும் அமைப்பு தமிழ் கற்கும் மாணவருக்கான பாட நூல்களை வெளியிட்டு வைத்தது. மேம்படுத்தப்பட்டது என்ற சொல்லுக்கு, திரிபுப்படுத்தப்பட்டது என்றொரு பொருளும் இருப்பதாக இந்நூலைப் பார்த்தபின்தான் அறியக் கிடைத்தது.

எந்தவகையில் மேம்படுத்தப் பட்ட பாடநூலாக இருக்கக் கூடும் என்று ஆராய்ந்தால், முகப்புப் படங்களில் மட்டுமே அவை மேம்படுத்தப்பட்டு இருக்கின்ற என்பதை அறிந்தோம். பாடநூல்களின் அலகுகளில் அவை அனைத்தும் தமிழரின் வரலாறு மற்றும் பண்பாடு என்பவை திரிபுப்படுத்தப் பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தோம். அவசர அவசரமாக இப்பாடநூல் மாணவரின் கையில் திணிக்கப்படுவதன் நுட்பம் எமக்குப் புரியவில்லையாயினும், இந்தத் திணிப்பிற்கான அவசியம் இப்பொழுது உருவாக்கப்பட்டிருப்பதன் தேவையை நன்கு உணர்ந்து கொண்டுள்ளோம்.

குறிப்பாக, பல பாடங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுதப்பட்டிருக்கும் தமிழரின் வரலாறு அப்படியே மகா வம்சத்தின் தமிழ்ப் பதிப்போ என எண்ணும் வகையில் தொகுக்கப் பட்டிருக்கிறது. 2009 வரை சீராக இயங்கிய பல கட்டுமானங்கள் வெற்றிகரமாக ஆதிக்க அரசுகளால் சிதைக்கப் பட்ட பின்னர், இதுவரை சீராக இயங்கிவந்த தமிழ்க் கல்வியில்





திட்டமிட்டே கை வைத்திருக்கிறார்கள்.

இந்த இன்னலின் தாக்கம் புரியாமல், பலர் சாதாரணமாக இருக்கிறார்கள். இடம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாடுகளில் தமிழர்களது வரலாற்றை நேர்த்தியாகக் கற்பதற்கு ஏற்புடையதாக, ஏலவே இருந்த தமிழ்ப் பாடநூல்கள் சிதைக்கப்பட்டதன் அவசரமும், அவசியமும் யாருக்கும் தெரிவிக்கப் படவில்லை. ஏற்கனவே இருந்த நிர்வாகத்திற்கும், புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் நிர்வாகத்திற்கும் இடையிலான நிதிப்பிரச்சனையே, புதிய பாடநூல்கள் உருவாகக் காரணம் என்று புதிய நிர்வாகம் சார்ந்தவர்களின் ஏவற்பிரதிநிதிகள் கூவித்திருக்கிறார்கள். இரு அமைப்புகளுக்கிடையில் நிதிப் பிரச்னையோ அன்றி, நிர்வாகப் பிரச்சனையோ எதுவாயினும், மாற்ற வேண்டியது அந்தப் பொறுப்புகளில் உள்ளவர்களையே தவிர, பாடநூல்களை அல்ல என்பதுகூட அறியாதவர்களா நிர்வாகப் பொறுப்புகளை வகிக்கிறார்கள்..?

ஆண்டு நான்கிற்குரிய பாடநூலில்; யாழ் நூலகம் எரிக்கப்பட்டது என்ற சொற்றொடருடன் நூலகத்தின் வரலாறு நிறைவு பெறுகிறது. ஏன் எரிக்கப்பட்டது? யாரால் எரிக்கப்பட்டது? என்ற எவ்வித கேள்விகளும் மாணாக்கருக்கு எழாதா? அல்லது அது அவர்களுக்குத் தேவையற்றது என இப்பாடத்தினை எழுதியவர்கள் சிந்திக்கிறார்களா? அவ்வாறே ஈழம் என்பதன் மறுபெயர் சிலோன் என அடையாளப் படுத்துகிறார்கள். சிங்களவர்கள் தம்மை அடையாளப் படுத்தும் வாழ்விடத்தின் குறியீட்டுச் சொல்லை, எவ்வாறு தமிழர்களின் தாயகத்துடன் ஒப்பிட இயலும் என்ற ஓர் அடிப்படைச் சிந்தனை கூட இவர்களுக்கு எழவில்லையா?

ஆண்டு 10 இற்கான நூலின் புலப்பெயர்வு என்ற பாடத்தில், "ஈழத்தமிழர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடியப் போராட்டத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட மனித உரிமை மீறல் காரணமாக அவர்கள் புலம்பெயர் நேரிட்டது" என்று வெற்று வாக்கியமாக எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், புலம்பெயர்ந்த பின்னும் ஈழத்தமிழர்கள் தமது உரிமைக்காக நாடுகள் தோறும் போராடி வருவதையும், ஈழத்தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாகவும் எவ்வித விடயங்களும் எழுதப்படவில்லை. மென்மையான சொல்லாடல்கள் மூலம் ஈழத்தமிழருக்கு




இழைக்கப்பட்ட அநீதிகளை மூடிமறைக்க முற்படும் இவர்கள் யார் என்ற கேள்வி இப்பொழுது எழுகிறதல்லவா? புலம்பெயர்ந்த பின்னும், மேடைகள் தோறும் விடுதலை, விடுதலை என்று கதறும் இதே நபர்களின் கூடாரத்திலிருந்து, வரலாறு திரிக்கப் பட்ட பாடநூல் வெளிவருவது இவர்களது சொல்லுக்கும், செயலுக்கும் சம்பந்தமே இல்லை என்பதை உணர்த்துகிறதல்லவா ?

தமிழீழத்தில் பிறந்து தமிழுக்கும், தமிழினத்திற்கும் தொண்டாற்றியப் புலவர்களையும், மாமனிதர்களையும் பட்டியலிட்டாலே பல பக்கங்கள் தேவைப்படும் நிலையிருக்கிறது. ஆனால், எங்கோ பிறந்து, எங்கோவொரு தேசத்திற்குத் தொண்டு செய்த அப்துல் கலாமின் வரலாற்றை இங்கே கொண்டு வந்து நுழைத்திருக்கிறார்கள் இந்நூலைத் தொகுத்த விற்பன்னர்கள்.

“துரை விதி” என்ற பெயரில் தனியாக விதியொன்றை உருவாக்கி, ஈழத்திற்குப் பெருமை சேர்த்த மாமனிதர் துரைராஜா பற்றிய வரலாறு இவர்களுக்குக் கசக்கிறது. ஆறுமுக நாவலரைத் தெரியவில்லை, தியாக தீபம் திலீபனின் முழு வரலாறு எழுத முடியவில்லை, வீரன் சிவகுமாரன் வரலாறு எழுத முடியவில்லை. அதிகம் ஏன், தமிழீழம் என்று எழுதுவதற்கு இவர்களுக்கு மனம் பொறுக்கவில்லை என்றால், இவர்கள் யாரால் இயக்கப் படுகிறார்கள்? எங்கிருந்து இவர்கள் எமது பிள்ளைகளின் தமிழ்க் கல்வியை நிர்ணயிக்க நுழைக்கப்படுகிறார்கள்?

*1956, 1977, 1983* ஆகிய வருடங்களில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை காரணமாக எத்தனையோ உறவுகள் உயிரிழந்து, உடைமைகளை இழந்து, வீதிவீதியாகச் சிங்களவர்களால் கொளுத்தப்பட்ட நிகழ்வை “இனக் கலவரம்” என எழுதி வைத்திருக்கிறார்கள். அப்படியாயின் இன அழிப்பு என்பது என்ன? அது எப்போது நிகழ்ந்தது? என எதிர்காலச் சந்ததி நம்மைக் கேட்கப் போகின்ற நிலையை இவர்களே உருவாக்குகிறார்கள் என்பது இங்கே தெளிவாகப் புலப்படுகிறது.

சோழர் ஆட்சியில் தான் தமிழர்கள் இலங்கையில் குடியேறியதாக எழுதி வைத்திருக்கும் இவர்களுக்கு, இயக்கர் நாகர் என்பவர்கள் யார்? அவர்கள் எங்கெங்கே வாழ்ந்தார்கள்? என்பது பற்றிய அறிவே கிடையாதா? அல்லது தமிழகத்திலிருந்து வந்த மொழிதான் தமிழ் என, சிங்களத்தின் ஆட்சியாளருக்கு ஏற்றவகையில் புதிதாக இட்டுக்கட்ட முனையும் கைக்கூலிகளா இவர்கள்?

புதிதாக வெளியிடப்பட்ட பாடநூலை ஒறுத்து, உலகெங்கிலுமுள்ள பல தமிழ்ப் பாடசாலைகள் தமது கற்றல் செயற்பாடுகளை நிறுத்தி வைத்துள்ளன. இதையெல்லாம் பற்றிய கவலை புதிதாக




முளைத்த அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவைக்குக் கிடையாது. காரணம் அவர்களது குறி பணம் திரட்டுதலே அன்றி வேறில்லை. புதிதாக வெளியிடப்பட்ட நூலை மேற்பார்வை செய்தவர்கள் யார்? என்பதோ, அச்சுக்கு முன்பதாக இதைச் சரிபார்த்தவர்கள் யார்? என்பதோ இதுவரை எவரும் சொல்லாத இரகசியமாக இருக்கிறது.

ஆனால், புலமையாளர்கள் என்ற பெயரில் சிலரை அழைத்து, ஒளிப்பதிவுகள் மூலம் இந்நூலிற்கான விளம்பர அனுசரணை மட்டும் அவசர அவசரமாகப் பெறப்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கானப் பாடநூல்களை வாங்கிக் களஞ்சியப்படுத்தி வேறு வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மொழி அழிந்தால் இனம் அழியும் என்பது சில இடங்களிலும், இனம் அழிந்தால் மொழி அழியும் என்பது சில இடங்களிலுமாக உலகெங்கும் பல அடையாளங்கள் அழிக்கப்பட்டு விட்டன. தமிழர்கள் தமது இனத்தையும், மொழியையும் காத்துக்கொள்ள இதுவரை பல்லாயிரம் உயிர்களை அர்ப்பணித்து விட்டார்கள். மாவீரர் நாளும், முள்ளிவாய்க்கால் கஞ்சியும் எமக்குப் போதுமான அடையாளம் என்று சொல்லியபடி, வரலாற்றுச் செய்திகளில் திரிபுகளை ஏற்படுத்தும் கூட்டங்களை மக்கள் அடையாளம் காணவேண்டும்.

மாவீரர் நாள் எதற்காக நினைவு கூறப்படுகிறது என்பதற்கான வரலாறு கூட பாடநூல்களில் கிடையாது. முள்ளிவாய்க்கால் நிகழ்வின் வலி பற்றி எந்தப் படமும் கிடையாது. வரலாற்றைத் திரிபுப்படுத்தி வெளியிடப்பட்டிருக்கும் இவ்வாறான பாடநூல்களை மீளப் பெறாதவிடத்து, யாருக்குமே உதவாத, பொய்யான உருட்டுக் கதைகளைக் கொண்ட பாடநூல்களைக் கற்பதைத் தவிர்த்து, உங்கள் பிள்ளைகளைத் தற்காத்துக் கொள்ளுமாறு அகரம் அன்புடன் வேண்டி நிற்கிறது.




மனோ

# காசிக்கு 2வது வட்டுக் கோட்டைத் தீர்மானம்

# எதற்கு?



**காசி ஆனந்தனுக்கு 1976ல் எடுக்கப்பட்ட வட்டுக் கோட்டைத் தீர்மானம் எதற்காக இன்று மாற்றப்பட வேண்டும் என்கிற தேவை ஏன் வர வேண்டும்?**

பல சர்வதேச அரங்குகளில் விவாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளின் ஒட்டு மொத்த கோரிக்கையான 1976 வட்டுக் கோட்டைப் பிரகடனம் வரலாற்றில் உறுதியான பதிவைக் கொண்டுள்ளது. ஈழத் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் நிலைப்பாட்டை வலியுறுத்தும் இந்தப் பிரகடனத்தைத் தகர்க்க எந்தக் கொம்பனுக்கும், எந்தப் புல்லுருவிக்கும், எந்த எட்டப்பனுக்கும் இடம் அளிக்க முடியாது. இந்தப் புரிதல் ஈழத் தமிழரின் அரசியல் எதிர்காலம் பற்றிப் பேசும் எவருக்கும் கட்டாயம் இருக்க வேண்டும்.

1976ஆம் ஆண்டு, மே மாதம் 14ஆம் திகதி முதலாவதும் முடியுமான வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இன்றோடு அத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நாற்பத்தைந்து (45) ஆண்டுகள் கடந்துவிட்டன. அதே மாநாட்டில் உருவானதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணி என்கிற மலையகத் தமிழர் வடக்கு, கிழக்கு மகாணத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழர்களின் ஏக அரசியல்த் தலைமை.

முப்பெரும் தமிழ் தலைவர்களான திருவாளர்கள். ஜீ.ஜீ. பொன்னம்பலம், சௌமிய மூர்த்தி தொண்டைமான், தந்தை செல்வா ஆகியோர் இணைந்து எடுக்கப்பட்ட பிரகடனம். அந்தக்


ஜீ.ஜீ.பொன்னம்பலம்


சௌமிய மூர்த்தி
தொண்டைமான்


சா.ஜே.வே. செல்வநாயகம்

களத்தில் உருவான தமிழர் விடுதலைக் கூட்டணி1977 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் வட்டுக் கோட்டைப் பிரகடனத்தை மக்கள் முன்வைத்து, மக்களின் ஆணையும் பெற்று மகத்தான வெற்றியுடன் ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சி ஆன நிலையில், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அப்பாப் பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்கட்சித் தலைவரும் ஆனார்.

பதவியும், பணமும் பெற்றதும் அவர் சிங்களத் தலைவன் ஜே.ஆரின் அடிவருடி ஆக மாறி, ஈழ விடுதலைப் போராளிக் குழுக்களைக் காட்டிக் கொடுக்கும் அடிமையாக எட்டப்பனாக மாறினார். பிரிவினை கோரும் தமிழரின் அரசியல் உரிமையைத் தடுக்கும் 6வது அரசியல் அரசமைப்புச் சட்டத்தைச் சட்டப்படி எதிர்க்காமல் மறைமுக ஆதரவைக் கொடுத்தார்.

போராளிக் குழுக்களை ஒடுக்கி அழிக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்த்து அரசியல் செய்வதைத் தவிர்த்தார். அடுத்து வந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜன்ம விரோதியான ஜயவர்த்தனா வெற்றி பெறவேண்டும் என்பதற்காகவே தமிழர் தரப்பில் யாரையும் ஆதரிக்காமல் பகிஷ்கரிப்பு என்கிற பகல் வேடம் போட்டு, மீண்டும் இனவெறி அதிபர் வெற்றிக்கு உதவிய உத்தமர்தான் அண்ணன் அமிர்.

அவர் அணைப்பில் அரசியல் செய்து வடக்கையும், கிழக்கையும் அரசியல் ரீதியாகப் பிளவுபடுத்தி தமிழரசுக் கட்சியின் பிரச்சாரப் பீரங்கியாக விளங்கிய செ.இராசதுரை கட்சியிலிருந்து வெளியேறக் காரணமானவர் காசி என்பதை அறியாத தமிழர் கிடையாது. அப்படிப்பட்ட காசி ஆனந்தன் எப்படி விடுதலைப் புலிகளின் இயக்கத்தில்





இணைந்து, புலிகள் இயக்கத்தின் சீருடை அணிந்து, உலகறியப் பவனி வர முடிந்தது?

புனிதமான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் என்கிற வெள்ளாட்டு மந்தையில் இந்தக் கறுப்பாடு எப்படி வந்தது? இந்திய 'ரா' உளவுப் படையின் உள்ளடியில் உள்ளே வந்த காரணத்தால், உயிரோடு கூட்டி வந்து



பாதுகாப்பாகப் பாலூட்டிச் சீராட்டி இன்று மீண்டும் தமிழக அரசியலில் தமிழ்த் தேசியத்தையும், மேதகு தலைவர் பிரபாகரனையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் இலட்சியங்களையும் தனித் தமிழ் ஈழ விடுதலைப் போரையும், இந்திய அரசியலில் பேசிப் பெரும் எழுச்சியாக மாறிவரும் செந்தமிழன் சீமானையும் ‘நாம் தமிழர் கட்சி’யையும் நசுக்க வந்திருக்கும் நச்சுப் பாம்பா இந்தக் காசி?

அந்த மாநாட்டில்தான் புதிய தமிழர் அரசியல் தலைமையாக தமிழர் விடுதலைக் கூட்டணி என்கிற அரசியல் அமைப்பு உருவாக்கப் பட்டது. அந்த அமைப்பில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், சௌமிய மூர்த்தி தொண்டைமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தந்தை செல்வா தலைமையிலான அகில இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிகள் இணைந்தமையால் அது இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் ஒட்டு மொத்த அரசியல் எழுச்சியாக விளங்கும் வரலாற்றுச் சாதனை படைத்த நிகழ்வு.

*01.* இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய பாரம்பரிய, சுதந்திரம் மற்றும் இறையாண்மை கொண்ட தமிழர் தாயகம் வேண்டும்.

*02.* அதில் ஒரு தேசிய இனமாக தமிழரின் அரசியல் இலக்கை அவர்களே தீர்மானித்துக் கொள்ளும் தன்னாட்சி உரிமை வேண்டும்.

*03.* அதற்காக முழுமூச்சான பயணத்தை அஞ்சாத அர்ப்பணிப்புகளோடு நாம் முன்னெடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஒரு தேசிய இனத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, தமிழீழ அரசை மீளளித்தல் மற்றும் மீள் உருவாக்குதல் என்ற காரணத்தை இந்த தீர்மானம் கொண்டிருந்தது. இலங்கை 1948இல் சுதந்திரமடைந்த பின்னர் தமிழ் மக்களின்



உரிமைகள் மறுக்கப்பட, அதற்காக முப்பத்தெட்டு ஆண்டுகள் இலங்கை அரசுகளுடன் பேச்சுவார்த்தைகளும், போராட்டங்களும் இடம்பெற்ற நிலையில் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானம், தமிழர் விடுதலைப் போராட்டத்தில் மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது,

இதுவே ஆயுதப் போராட்டத்திற்கும் அடித் தளமிட்ட நிகழ்வாகும். சுமார் நாற்பது வருடங்களாக மிதவாத அரசியலில் சந்தித்த தோல்விகளும், இலங்கை அரசின் உறுதியான தமிழர் மீதான ஒடுக்குமுறைச் செயற்பாடுகளும் ஆயுதப் போராட்டத்திற்கு வித்திட்டன. வட்டுக் கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நாற்பத்தைந்து ஆண்டுகள் கடந்துள்ள போதும், இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படாத ஒன்றாகவே தொடர்கிறது என்பதே இந்தத் தீர்மானத்தை இன்னும் உயிர்ப்பிக்கிறது.

**இன்று தனித் தமிழ் ஈழக் கோரிக்கையை அரசியல் ரீதியாக தமிழகத்திலும், உலகப் பரப்பிலும் பிரச்சாரப் படுத்தி உயிர்ப்புடனும், துடிப்புடனும் கொண்டு செல்லும் ஒரே சக்தியாக செந்தமிழன் சீமானும் அவர் தலைமையிலான 'நாம் தமிழர் கட்சி' என்பது உலகறிந்த உண்மை.**


நாடு கடந்த தமிழ் ஈழ அரசு, உலகத் தமிழர் பேரவை போன்ற ஈழத் தமிழர் அமைப்புகளே மெத்தனமாக ஏனோ தானோ என தமிழ் அரசுக் கட்சியின் அடிமை அரசியலுக்கு ஆதரவாக சம்பந்தன், சுமந்திரன், மாவை போன்றோரின் அடியாட்களாக இயங்கி வரும் நிலையில் காசியின் 2ம் வட்டுக் கோட்டைத் தீர்மானம் பேரிடியாக விழுந்துள்ளது.

ஈழத் தமிழருக்கு ஒரே ஒரு ஆதரவுத் தளமாக நாம் தமிழர்கட்சியும் அதன் ஆதரவு இணைய ஒளிகளும் விளங்கும் நிலைதான் சிறிய ஆறுதலைத் தருகிறது. அந்த வகையில் 'ராவணன்' இணைய ஒளியில் இலங்கைப் பா.உ.திரு.செல்வராசா கஜேந்திரன் வழங்கிய கருத்துகளை பின்வரும் இணைப்பில் காணலாம். திரு கஜெந்திரன் கூற்றுப்படி இந்தத் தீர்மானம் இந்திய மத்திய அரசு பா.ஜ.க.வின் புவிசார் தமிழர் விரோத அரசியல் தேவைகளுக்கான அடித்தளம் போட்டு ஈழத் தமிழ் மக்களை இந்திய இலங்கை அரசுகளின் கொத்தடிமைகளாக்கும் செயலையே காசியார் செய்ய முற்படுகிறார் என்பது தெளிவாகத் தெரியவருகிறது.

காசியின் 2வது வட்டுக்கோட்டை பிரகடனம் இன்று தமிழக அரசியலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரையும், தமிழ்த் தேசியத்தையும் தரங்கெட்டுப் பேசிவிமர்சித்து வரும் வை.கோ. திருமா, கொளத்தூர் மணி போன்றவர்களின் குரல்களைப் பிரிதி பலிப்பதாகத் தெரிவதாலும், அது ஒரு இணைய வழி உரையாடலாக அமைந்ததாலும் முழுமையான விபரங்கள் கிடைக்காத நிலையில் அகரம் தனது எதிர்ப்பைப் பதிவு செய்கிறது.

எனினும், இந்திய அரசியலில் குறிப்பாகத் தமிழகத்தில் உள்ளாட்சி மற்றும் மக்களவைத் தேர்தல்கள் நெருங்கி வருவதால் தி.மு.க. பா.ஜ.க. ஆதரவுக் கட்சிகள் நாம் தமிழர் கட்சியையும், தமிழ்த் தேசியத்தையும் ஒழித்துக் கட்டும் முயற்சியாக காசியின் செயற்பாடுகளைப் பார்க்க வேண்டி உள்ளது.

காசி தமிழகத்தில் அரசின் ஒரு சிறைப் பறவையாக வளர்க்கப்பட்டு வருகிறார். அவரது பூர்வீகம் தமிழ் அரசுக் கட்சி அமிரின் செல்லப் பிள்ளைகள் சம்பந்தன், சுமந்திரன், மாவையின் பங்காளிகள். எனவே, நாம் காசியின் செயற்பாடுகளைக் கண்டிக்காமல் விட்டு விட முடியாது.தேவைப் பட்டால் இதுவும் வரும் இன்னமும் வரும்.



பூமிபுத்திரன்

# உலகை அச்சுறுத்தும் கொரோனா



**கொரோனாக் கொள்ளை நோய்க்கான தடுப்பு மருந்து அறிமுகம் செய்யப்பட்ட இந்த ஆண்டின் ஆரம்பத்தில் கொள்ளை நோயை விரைவாக வெற்றி கொண்டு விடலாம் என உருவாகியிருந்த நம்பிக்கை படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றது.**

தடுப்பு மருந்து ஏற்றும் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட அதனுடன் போட்டி போடுவதைப் போன்று, கொரோனாத் தீநுண்மியும் பல்வேறு உருமாற்றங்களுக்கு உட்பட்டு, மனித குலத்தை அச்சுறுத்தி வருகின்றது. 2019ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் சீனாவில் முதன்முலில் கண்டு பிடிக்கப்பட்ட கொரோனாத் தீநுண்மி 2021 ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் - உலகளாவிய அடிப்படையில் - 200 மில்லியன் மக்களைப் பாதித்தது மட்டுமன்றி 4.26 மில்லியன் மக்களையும் பலிகொண்டு விட்டது.

ஆகஸ்ட் மாதத் தொடக்கத்தில் கிடைத்த புள்ளி விபரங்களின் படி கொரோனா பரவல் கடந்த ஆறு வாரங்களாகத் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ள அதேவேளையில் மரண வீதமும் ஒரு மாத காலமாக சீராக அதிகரித்து வருகின்றது. இதனை வேறு விதத்தில் சொல்வதானால் தினமும் 6,05,000 பேர் தொற்றுக்கு ஆளாகின்றனர். அதேவேளை உலகளாவிய அடிப்படையில் தினமும் 9,300 பேர் மரணத்துக்கு ஆளாகின்றனர். இனிவரும் நாட்கள் மிக இருண்ட நாட்களாக அமையக் கூடும் என்ற அடிப்படையிலான எச்சரிக்கைகளும் மருத்துவத் துறையினரிடமிருந்து விடுக்கப்படுகின்றது.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள முதல் மூன்று நாடுகளாக அமெரிக்கா, இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் உள்ளன. அமெரிக்காவில் மொத்தம் 3,68,96,358 மக்கள் நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ள நிலையில் 6,34,688 பேர் மரணத்தைத் தழுவியுள்ளனர். இந்தியாவைப் பொறுத்தவரை 3,2,046,031

பேர் தொற்றுக்கு ஆளாகினர். மரணங்களின் எண்ணிக்கை 4,29,398. பிரேசில் நாட்டில் 5,64,890 பேர் மரணத்தைத் தழுவியுள்ளனர். இந்த நாட்டில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 20,213,388.

சாத்தியமான சகல வழிமுறைகளையும் பரீட்சித்துப் பார்த்த அரசாங்கங்கள் - தற்போது கைவசம் உள்ள ஒரே நம்பிக்கையான - தடுப்பூசியை சகல மக்களும் பெற்றுக் கொள்வதை உறுதி செய்யும் நடைமுறைகளைக் கையாளத் தொடங்கியுள்ளன. குறிப்பாக மேற்குலகில், தடுப்பூசிகள் விருப்பத் தேர்வுக்கு உரியவை என்ற கொள்கையில் படிப்படியாக மாற்றங்கள் ஏற்படுவதை அவதானிக்க முடிகின்றது. மருத்துவத் துறையில் பணி புரிவோருக்கு அத்தியாவசியம், குறிப்பிட்ட வயதுப் பிரிவினருக்கு அத்தியாவசியம், படைத் துறையினருக்கு அத்தியாவசியம் என்பது போன்ற சட்டங்களும், நடைமுறைகளும் படிப்படியாக நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கின்றன.

இது தவிர, பொதுப் போக்குவரத்து மார்க்கங்களைப் பயன்படுத்துவோர் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும், உணவு விடுதிகள் மற்றும் உல்லாச விடுதிகளுக்குச் செல்வோர் தடுப்பூசிச் சான்றிதழ்களைக் காட்ட வேண்டும், விமானத்தில் பயணிக்க விரும்புவோர் கண்டிப்பாக இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் போன்ற நடைமுறைகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இவற்றுக்கும் அப்பால் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுதலிலும் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்க அரசாங்கங்கள் முன்வந்துள்ளன. நாடுகளின் எல்லைகளில் மீண்டும் இறுக்கமான கண்காணிப்புகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இவை ஒருபுறம் இருக்க, தடுப்பூசிகளுக்கு எதிரான கருத்துகளைக் கொண்டோரும், தம் மீது வலிந்து திணிக்கப்படும் நடைமுறைகளைக் கடுமையாக எதிர்க்கத் தொடங்கியுள்ளனர். தடுப்பூசி ஏற்றிக் கொள்வதும், ஏற்றிக் கொள்ளாததும் தமது சுதந்திரம் என இவர்கள் வாதிட, ஒரு சாரார் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாமல் விடுவதனால் ஒட்டுமொத்த சமூகமுமே பாதிக்கப்படுகின்றது என அரசாங்கத் தரப்பில் பதில் வாதம் முன்வைக்கப் படுகின்றது.

இதேவேளை, இந்த நெருக்கடி நிலையைப் பயன்படுத்திக் கொள்ளும் மருந்து நிறுவனங்கள் தமது மருந்துக்கான விலையை உயர்த்தியுள்ளன. கடந்த காலாண்டில் தமது வருமானத்தைப் பல மடங்காக உயர்த்திக் கொண்டுள்ள பன்னாட்டு மருந்து நிறுவனங்கள்,



தற்போது புதிதாக உருவாகியுள்ள திரிபு பெற்ற தீநுண்மியின் தாக்கத்தில் இருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக மேலதிகமாக, விசேடமான ஒரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ள வேண்டும் எனச் சொல்ல ஆரம்பித்துள்ளன.

தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதால் கொரோனா அபாயத்தில் இருந்து முற்றாகத் தப்பித்து விடலாம் என்ற நம்பிக்கை நாளுக்கு நாள் குறைவடைந்து வருகின்றது. கொரோனாத் தீநுண்மிக்கு எதிரான



மனித குலத்தின் போராட்டம் தீவிரமடைய, தீவிரமடைய அதற்கெதிரான கொரோனாத் தீநுண்மியின் எதிர்வினையும் தீவிரமடைவதையே திரிபடைந்த தீநுண்மியின் தாக்குதல்கள் தெளிவு படுத்துகின்றன.

எடுத்துக்காட்டாகச் சொல்வதானால் முதன்முதலில் இந்தியாவில் கண்டறியப்பட்ட டெல்டா வகை தீநுண்மி, சாதாரண தீநுண்மியை விடவும் 2.5 மடங்கு வேகமாகப் பரவும் திறன் கொண்டதாக உள்ளது. அது மாத்திரமன்றி, ஏற்கனவே தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களையும் தாக்கும் வல்லமையையும் பெற்றிருக்கின்றது. அமெரிக்காவின் தொற்றுநோய்ப் பரவல் தடுப்புப் பிரிவின் இரகசிய அறிக்கை ஒன்றின் பிரகாரம், ஏற்கனவே தடுப்பூசியைப் பெற்றுக் கொண்ட மக்களிடையே வாரமொன்றுக்கு ஏறக்குறைய 35,000 பேர் வரையானோருக்கு டெல்டா வகைத் தொற்று ஏற்படுவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

வாயிலும், மூச்சுக் குழாயிலும் உயிர் வாழக் கூடிய டெல்டா வகைத் தீநுண்மி, தடுப்பூசி மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட நோயெதிர்ப்புச் சக்தியில் இருந்து தப்பித்துக் கொண்டு, சூழ இருக்கும் மனிதர்களுக்கு நோய்க் கிருமிகளைக் கொண்டு சேர்க்கின்றது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் சமூகப் பரவல் சங்கிலியை உடைப்பதில் தடையாக இருந்து வருகின்றது.

தடுப்பூசிகளை அதிகமாகப் பெற்றுக் கொண்ட அமெரிக்கா போன்ற நாடுகளிலேயே நிலைமை இவ்வாறு இருக்கும் போது, தடுப்பூசிகளுக்குத் தட்டுப்பாடு உள்ள மூன்றாம் உலக நாடுகளின் நிலை எவ்வாறு இருக்கும்? தாய்லாந்து நாட்டில் மொத்த மக்கட்தொகையில் 6 வீதத்துக்கும் குறைவானோரே இதுவரை தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளனர். இங்கே இவ்வருடத்தின் ஏப்ரல் மாதத்தில் நூறுக்கும் குறைவாக இருந்த மரண எண்ணிக்கை தற்போது 6,942 ஆக சடுதியாக அதிகரித்துள்ளமைக்கு டெல்டா வகைத் தீநுண்மியே காரணம் எனப்படுகின்றது.

இதேவேளை, டெல்டா ரகத்தை விடவும் வீரியமான மேலும் பல திரிபடைந்த தீநுண்மி வடிவங்கள் உருவாகியுள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். லம்டா வகைத் தீநுண்மி தற்போதுவரை கண்டு பிடிக்கப்பட்டுள்ள தடுப்பூசிகள் அனைத்தையும் எதிர்க்கும் வல்லமை கொண்டது என்ற பகீர் தகவலை வெளியிட்டுள்ள விஞ்ஞானிகள், எற்றா, அயோற்றா, கப்பா ஆகிய பெயர்களிலான திரிபடைந்த தீநுண்மிகள் அடுத்து மனித குலத்தைத் தாக்கக் காத்திருக்கின்றன என்ற எச்சரிக்கையையும் விடுத்துள்ளனர்.

மனித குலத்துக்கு எதிரான இந்த மாபெரும் தாக்குதலில் இருந்து மனித குலம் தப்பிப் பிழைக்குமா? அதற்கான மார்க்கம் என்ன? என்பது போன்ற கேள்விகளுக்கு ஒரே பதிலாகவும், நம்பிக்கையாகவும் தற்போது வரை இருப்பது தடுப்பூசிகள் மாத்திரமே. எனவே, அதனைப் பெற்றுக் கொண்டு தங்களையும், சமூகத்தையும் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகிறது.



IMPORTAS
Cash & Carry

Kranichweg 8, 3074 Muri Bei Bern
☎ 031 951 24 44

Baslerstrasse 102, 8048 Zürich - Switzerland
Tel : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56
email : info@importas.ch Web : www.importas.ch

# IMPORTAS CENTER

எம்முடன் இணைந்து கொள்ள விரும்பும் ஆர்வமுள்ள
வியாபாரிகள் தேவை...

200+
பார்க்கிங் வசதியுடன்



Textile, Saloon,
தங்க நகைக் கடை ஆகியவற்றுக்கு
போதுமான இடவசதியுள்ளது.

Highway இலிருந்து
700m தூரம் மட்டுமே!

$400m^2$ இல்
Importas Cash & Carry
அமையவுள்ளது.

உங்கள் வியாபாரத்தை அமைப்பதற்கான இடவசதியுள்ளது.

மேலதிக கடைகளை அமைக்க விரும்பினாலும் தொடர்பு கொள்ளவும்.

+41 78 883 21 99 | info@globalstoreag.ch | Importas Oftringen

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

# அருத்தது என்ன?



புலிகளின் உத்திகள் இராணுவ செயல்பாடுகளுக்கு வடிவமைக்கப் பட்டாலும், அவற்றை சமூகம், அரசியல் உட்பட அனைத்து சிக்கலான அமைப்புகளுக்கும் பயன்படுத்தலாம். இது ஏனென்றால் புலிகள் பயன்படுத்திய உத்திகளும், சிக்கலான அமைப்புகளுக்கான உத்திகளும் ஒன்றே என்று அண்மைய ஆராய்ச்சிகளின் மூலம் தெரிகிறது. அடிப்படையில் இன்று நாம் எதிர்நோக்கும் பெரும்பாலான சிக்கல்களுக்கான உத்திகளைப் புலிகள் ஏற்கனவே நமக்காக உருவாக்கி விட்டார்கள். அதை எடுத்து பயன்படுத்துவதுதான் மிச்சம்.

அன்று புலிகள் பயன்படுத்திய உத்திகளை இன்றைய தமிழ்த்தேசிய செயல்பாடுகளுடன் ஒப்பிட்டால் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம்தான் தெரிகிறது. அதற்கு இன்றைய தமிழ்த் தேசியத்தைக் குற்றம் கூற முடியாது. புலிகளின் உத்திகளை முழுதாகப் புரிந்து கொள்வதற்கு புலிகள் தங்கள் உத்திகளை இரகசியம் காரணமாக ஆவணப்படுத்தவில்லை அல்லது அவ்வாறான ஆவணம் 2009-இல் அழிந்து போயிருக்கலாம். இதனால் நாம் பின்னோக்கி அவர்களின் செயல்பாடுகளை நவீன அறிவியல் தத்துவங்களின் வாயிலாக ஆராய்வதின் மூலமே அறிந்து கொள்ள முடிகிறது.

இன்றைய தமிழ்த்தேசிய இயக்கங்கள் தங்களது உத்திகளையும், செயல்பாடுகளையும் சிக்கல் அமைப்பு சட்டகத்தின் (அல்லது பிரபாகரன்





சட்டகத்தின்) கீழ் மறுசீரமைப்பு செய்ய வேண்டும். அதற்கு அடிப்படையாக கீழ்வரும் கேள்விகளிலிருந்து ஆரம்பிக்கலாம்:

**1. நீங்கள் உங்கள் எதிரியைவிட அதிக அறிவைப் பெற்றிருக்கிறீர்களா?**

இடார்வினின் "தக்கது எஞ்சும்" என்ற தத்துவம் சிக்கல் அமைப்பில் "அறிவுடையது எஞ்சும்" என்று மாற்றி வழங்கப்படுகிறது. புலிகளால் இவ்வளவு வெற்றிகளைப் பெறுவதற்கு ஒரு அடிப்படைக் காரணம், அவர்கள் எதிரிகளை விடப் போர் உத்திகளிலும், கள நிலவரங்களிலும் அறிவில் சிறந்தவர்களாக இருந்ததனால்தான். தமிழ்த் தேசிய இயக்கங்கள் தங்களுக்குத் தேவையான அறிவைத் திரட்டுவதில் முனைப்புடன் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் தங்களது ஆற்றலை தேவையில்லாத இடங்களில் வீணடிக்க வேண்டி வரும். இருப்பதிலேயே மோசமான தவறு என்பது, நாம் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்பதே தெரியாமல் செல்வதுதான். நமது உத்திகளைத் தொடர்ந்து கற்று கேள்விக்குட்படுத்த வேண்டும்.

நமது அறிவு முன்னேற்றத்தைத் தடுக்கும் பெரிய தடை என்பது "நம்மால் அனைத்தையும் பார்த்து புரிந்துகொள்ள முடியும்" என்பதே. இதுபோன்ற கருத்துகள்தான் "உலகம் தட்டை" என்று மனிதர்களை நீண்ட காலமாய் முன்னேறாமல் தடுத்தது. நாம் அறிவியல் தத்துவங்களைக் கற்க வேண்டும், அதன் அடிப்படையில் சிந்திக்க வேண்டும்.

**2. நீங்கள் ஒரு உத்தி என்றில்லாமல் பல உத்திகளைக் கையாள்கிறீர்களா?**

சதுரங்க ஆட்டத்தில் எப்படி ஒரு காயை மட்டும் நகர்த்தி வெற்றிபெற முடியாதோ, அதுபோல ஒரு உத்தியை மற்றும் வைத்துக் கொண்டு வெற்றிபெற முடியாது. பல்வேறு உத்திகளை இணைத்து வாய்ப்புகளைப் பெருக்கி, ஒவ்வொரு அடியாக வைத்துதான் வெற்றி பெற முடியும். வெற்றிக்கான திட்டம் என்று முதலிலேயே ஒரு திட்டம் தீட்டமுடியாது. வெற்றிக்கானப் பாதை தானாக ஒவ்வொரு அடியாக பரிணமிக்கும்.

இன்று தமிழகத்தில் ஒரு பலமான அரசியல் கட்சியை உருவாக்கி வெற்றி கொள்ளலாம் என்று நினைப்பது ஒரு காயை நகர்த்தி, வெற்றி கொள்ள நினைப்பதற்குச் சமம். பா.ச.க கட்சி ***(BJP)*** ஏன் இந்திய அளவில் வெற்றி பெறுகிறது என்றால், அது ஒரு தனி கட்சி அல்ல, பல்வேறு இந்துத்வா அமைப்புகளுடன் சேர்ந்து இயங்கும் கட்சி. நம்மிடம் இருக்கும் காய்களின் எண்ணிக்கையை விட அவர்களிடம் அதிக காய்கள் உள்ளன. இதுதான் அவர்களின் வெற்றிக்கு அடிப்படை. அவர்களை எதிர்கொள்ள அவர்களைவிட அதிக

எண்ணிக்கையிலான அமைப்புகளை / உத்திகளை உருவாக்கி இயங்க வேண்டும். அப்பொழுது வெற்றி எளிதாகும்.

### 3. உங்கள் அமைப்புகள் கீழிருந்து மேலாக கட்டப்பட்டிருக்கிறதா?

ஒரு இயக்கத்தின் உண்மையான பலம் தலைமையில் இல்லை, அதன் கீழ்மட்ட உறுப்பினரிடம் உள்ளது. புலிகளின் பலம் ஒரு புலி வீரனின் நெஞ்சுரத்திலிருந்து பிறக்கிறது. அவ்வாறு பலமான உறுப்பினர்களை வைத்து, படிப்படியாக கீழிருந்து பல்வேறு பிரிவுகளை உருவாக்கி, அடுக்கடுக்காக ஒரு அமைப்பு உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவும் சிக்கனமாக தேவைக்கேற்ப இயங்கி, இயக்கத்தின் மொத்த வாய்ப்புகளை பெருக்கும்படி உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வுலகத்தில் உயிர்கள் இவ்வாறுதான் கீழிருந்து மேலாக பரிணமித்தன. அவ்வாறு கீழிருந்து



மேலாக உருவாகும் இயக்கங்கள்தான் பரிணாம இயக்கங்களாக, சூழலுக்கு ஏற்ப சிறப்பான தகுதியுடையதாக, வெற்றி பெறுவதாக அமையும்.

### 4. நீங்கள் புதுமையைப் படைக்கிறீர்களா?

ஒரு இயக்கம் தொடர்ந்து கற்று, புதுப்புது உத்திகளையும், அமைப்புகளையும் உருவாக்கிக் கொண்டு செல்ல வேண்டும். எவ்வளவு தூரம் பல காய்களைச் சேர்த்து நகர்த்துகிறீர்களோ, அவ்வளவு தூரம் வெற்றி வாய்ப்புகள் கூடும். அவ்வாறு புதுமையைப் படைக்க தொடர் கற்றலிலும், சோதனையிலும் ஈடுபட வேண்டும்.




**5. நீங்கள் சிக்கனத்தைக் கடைபிடிக்கிறீர்களா?**

இவ்வுலகில் பரிணாமப் போட்டியில் யார் சிக்கனமாக ஆற்றலைப் பயன்படுத்துகிறார்களோ, அவர்களுக்கே வெற்றிக்கான வாய்ப்புகள் கூடுகின்றன. இதை அனைத்து உயிர்களிடத்தும் காணலாம். இவ்வுலகில் சிக்கனமானது எஞ்சும் என்றும் கூறலாம். இயக்கத்தின் ஒவ்வொரு அடியிலும் சிக்கனம் பேணப்படவேண்டும். எந்த உத்திகள் சிறந்தது என்பதையும் சிக்கனமே கண்டுபிடிக்க உதவும். குறைந்த செலவில் எது அதிக வெற்றி வாய்ப்புகளை உருவாக்குகிறதோ, அந்த உத்திகளுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

இன்று தமிழ் தேசிய இயக்கங்கள் பல்வேறு போராட்டங்களை நடத்துகிறார்கள். ஆனால், அதில் எவ்வளவு வெற்றி கிடைக்கிறது என்பதில் தெளிவு இல்லை. வெற்றிக்கான வாய்ப்புகள் இல்லாத இடத்தில் பொருளையும், நேரத்தையும் வீணடிக்கக் கூடாது. தெளிவான குறிக்கோளுடன் செயல்பாடுகள் இருக்கவேண்டும். செயல்பாடுகள் குறிக்கோள்களை எட்டவில்லை என்றால், உத்திகளை மறுபரிசீலனை செய்து வீணான உத்திகளை / செயல்பாடுகளை நீக்க வேண்டும்.

**6.எதிரியின் ஆற்றலை வீணடிக்கிறீர்களா, உறிஞ்சுகிறீர்களா?**

உங்களின் ஆற்றலை சேமித்துக் கொண்டு, எதிரிகளின் ஆற்றலை வீணடிப்பது ஒரு உத்தியாக இருக்கவேண்டும். புலிகள் குறைந்த செலவில் எதிரிகளுக்கு பெரு நட்டத்தை உருவாக்குவதில் கை தேர்ந்தவர்கள். புலிகளின் பெரும்பாலான ஆயுதங்கள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றியவையே.

அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

இன்று தமிழகத்தின் பொருளாதாரத்தை உறிஞ்சி அதைக் கொண்டே தமிழையும், தமிழர் அடையாளத்தையும் வெகுகாலமாக அழித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தலைகீழாக மாற்றவேண்டும். எதிரியை உறிஞ்சி, நாம் எப்படி பலம்பெறுவது? என்று செயல்படவேண்டும்.

இதுவரை நாம் பார்த்தது பிரபாகரன் சட்டகத்தின் (சிக்கல் அமைப்பு சட்டகத்தின்) சில முக்கியமான ஆர்வத்தை ஏற்படுத்தும் கருத்துகளை மட்டுமே. இது எந்த வகையிலும் ஒரு முழுமையான ஆய்வு அல்ல.

புலிகளை அறிவில்லாத முரடர்கள் என்று சில தமிழ் இயக்கங்கள் குற்றம் சாட்டுகின்றன. ஆனால், உண்மையில் புலிகளைப் போல அறிவிலும், ஆற்றலிலும் விஞ்சிய இயக்கங்கள் இதுவரை தமிழர் வரலாற்றிலேயே தோன்றியதில்லை. புலிகள் கற்றது, படைத்தது பலவகையில் புதுமை என்பதால், உலக இராணுவங்கள் இன்னும் பல நூற்றாண்டுகள் அவர்களைக் கற்றுக் கொண்டிருக்கும். புலிகளைக் கற்காமல் தமிழ்த் தேசியம் ஒரு அடியும் முன்னேற முடியாது.

பி.கு: புலிகள் எந்த தவறும் செய்யாத இயக்கம் என்று நான் கூறவில்லை. இதை ஒவ்வொரு கட்டுரையிலும் தெளிவுப்படுத்தியே வருகிறேன். அவர்களிடம் இருந்து என்ன கற்கலாம்? என்பதுதான் எனது கட்டுரைகளின் நோக்கம்.

அவதானி

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

**உலக நாடுகளை உளவு நிறுவனங்கள் கையாளுகின்ற பொதுவான அணுகுமுறையைக் கடந்த பகுதிகளில் பார்த்தோம். அவ்வணுகுமுறைகள் யாவும் ஒவ்வொரு நாட்டினுடைய பொருளாதாரக் கட்டமைப்பைச் சார்ந்தும், அந்தந்த நாட்டு மக்களின் குணாம்சங்களைச் சார்ந்தும், ஆட்சி நிர்வாகத்தின் வலு, வலுவின்மையைப் பொறுத்தும் வித்தியாசப்படும்.**

ஆசியப் பிராந்தியத்தில் இலங்கைத் தீவை எடுத்துக் கொண்டு, அதனுடைய கடந்தகால அரசியல், பொருளாதார உறுதிநிலைத் தன்மையையும் இன்றைய அரசியல் பொருளாதார தளர்நிலைத் தன்மையையும் கவனத்தில் எடுத்து ஒப்பிடுகையில், ஏன் இப்படி இலங்கை ஆயிற்று? என்ற கேள்விக்கூடாகப் பார்க்கையில், ஒன்றுக்கும் மேற்பட்ட நாடுகளால் உளவு நிறுவனங்கள் வழியாக இலங்கை கையாளப்பட்டிருப்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல அவதானிகளால் கண்டறிய முடிகின்றது.

பொதுவாக இலங்கையின் அனைத்து மக்களையும் உள்ளடக்கிய தொகையையும், அவர்களுக்குத் தேவையான வளமும், அதனை நிர்வகிக்கும் ஆளுமையும், அதன் மூலம் இலங்கை மக்களைச் செல்வச் செழிப்புடன் வைத்திருக்கக் கூடிய பொருளாதார வளமும், அப்பொருளாதார வளத்தைப் பயன்படுத்துகின்ற பெரிமுறைகளிருந்தும், ஏன் இலங்கை சறுக்குமரத்தில் ஏறுகின்ற நிலைக்கொப்ப சறுக்கிக் கொண்டிருக்கின்றது? என்பதை கவனத்தில் கொள்ளும் போது, இலங்கையை வெளிநாடுகள் தமது நலனுக்காக மிக நீண்ட பல பல ஆண்டுகளுக்கு முன்பாகவே கையாளத் தொடங்கிவிட்டன என்பது தெளிவாகி விட்டது.

இலங்கையில் இரு இனங்கள் இருப்பதும், பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனம் என்ற பேதத்துடன் சமனற்ற உரிமை நிலையை ஆட்சி நடத்துபவர்கள் பேணுவதால், சிறுபான்மையினமான தமிழர்கள் கவலைப்படுவதும், தமது உரிமைக்காக தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் அரசியல்வாதிகள் மூலமாக அரசிடம் வேண்டுகோள் விடுவதும், அவை தொடர்ச்சியாக நிராகரிக்கப்படுவதையும் கவனிக்கும் சாதாரண மக்கள், இது இலங்கை அரசு வேண்டுமென்றே தமிழ்



மக்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துவதாகத் தான் நினைப்பார்கள்.

ஆனால், அரசை நடத்தும் பெரும்பான்மையினர் தமிழர்களின் பிரச்சினைகளை உணர்ந்து, அதற்கானத் தீர்வை முன்னெடுத்து, தமிழர் தரப்புடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, அதனை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக அதன் தலைவரும், சிறீலங்கா கட்சி சார்பாக அதன் தலைவரும் எதிர்ப்புத் தெரிவித்தமையால் ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்ட வரலாற்று நிகழ்வுகளை யாருமே மறக்கமாட்டார்கள்.

ஒப்பந்தங்கள் கிழிக்கப் பட்டதற்கு பின்னால் இருந்த சூத்திரதாரி யார்? அல்லது அந்த நாடு எது? தமிழர்களுக்கு எதிராக இனவாத விசத்தைக் கக்க வைத்த சூத்திரதாரி யார்? என்பதை மிக நுட்பத்துடன் சம்பவங்கள் மீது ஏன்? எப்படி? என்ற வினாக்களைத் தொடுத்துக் கொண்டு செல்கையில், இலங்கைத் தமிழர்களுக்குத் தெளிவாக விளங்குவது இத்தனைக்கும் காரணம், இலங்கையைச் சீர்குலைத்து அதனை பலவீனப்படுத்தி வைத்திருப்பதற்கு இந்தியாவின் உளவு நிறுவனமான றோதான் என்பது புரியும்.

ஒரு நாட்டினுடைய உறுதித் தன்மை அதன் பொருளாதாரத்திலேயே தங்கி உள்ளது. அதனைச் சீரழிப்பதற்கு முதலில் அந்த நாட்டினுடைய தேவையற்ற செலவீனங்களை அதிகரிக்க வேண்டும்.

இலங்கையில் தமிழர்களும் இருப்பதே இந்தியாவுக்கு அனுகூலமாகி விட்டது. இந்தக் கட்டுரையின் ஆரம்ப பகுதிகளில் பலம் பொருந்திய உளவு



நிறுவனங்களாக அமெரிக்காவின் சிஐஏ, இந்தியாவின் றோ, ரஸ்யாவின் வெளிநாட்டுக்கான மதி நுட்பவியலாளர் பிரிவு, இஸ்ரேலின் மொசாட் என்பவற்றைக் குறிப்பிட்டிருந்தேன்.

இக்கட்டுரைத் தொடர்களில் நாடுகளில் இருக்கும் தூதரகங்களும் ஒரு நாட்டினுடைய அன்றாட நிர்வாக நிகழ்வுகளை உன்னிப்பாக கவனிக்கும் உளவு வேலைகளையும் செய்கின்றன என்பதைக் குறிப்பிட்டிருந்தேன்.

இலங்கையில் இன முரண்பாடுகளை எப்படித் தோற்றுவிப்பது? என்பதை மிகத் தெளிவாகவே இந்தியா திட்டமிட்டது. பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்த போது, திணைக் களங்களில் தமிழர்களே அதிகாரிகளாக இருந்தார்கள்.

பிரித்தானியர் இலங்கையை விட்டுப் போனதன் பின்னரும் அது தொடர்ந்தது. பெரும்பான்மையினத்திற்கு



சிறுபான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் அதிகாரிகளாக இருப்பதை ஒரு காலகட்டத்திற்கு பின் பெரும்பான்மையினர் எதிர்க்கத் தொடங்குவது இயல்பானதே!.

இந்தச் சூழ்நிலையை இலங்கையைச் சீரழிக்க இந்தியா பயன்படுத்தத் தொடங்கியது. இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் அத்தனையையும் தூண்டிவிட்டது இந்தியாதான் என்றால், பலராலும்; அது நம்ப முடியாததே!.

இனக் கலவரங்கள் எப்படி ஏற்படுகின்றன? என்பதைக் கூர்ந்து கவனித்தால் அதன் ஆரம்பம் சிறு பெரியாகவே இருக்கும். கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பது போல, இந்திய தூதரகம் கட்சித் தலைமைகளுடனும், இனவாதிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி, இலங்கையில் வணிகத்திலும், அரசாங்க திணைக் களங்களிலும் தமிழர்களின் கை ஓங்கி வருவதை இயல்பாக சொல்வது போலச் சொல்வார்கள்.

இந்தக் கலந்துரையாடல்களுக்கு இந்தியத் தூதரகத்தின் அதிகாரிகள் எவருமே நேரடியாகக் கலந்து கொள்ள மாட்டார்கள் என்ற போதிலும், றோவின் வழிநடத்திலில் தூதரகத்திற்கு அப்பால் ஒரு சில அதிகாரிகள் பயன்படுத்தப் படுவார்கள்.

இச்சந்திப்புகள் எதுவுமே தனிப்பட்ட சந்திப்புகளாகவும், நிகழ்ச்சி நிரல் அற்றவையாகவுமே இருக்கும். இச்சந்திப்புகள் எதுவுமே பத்திரிகைகளில் செய்திகளாக வெளிவருவதில்லை.

இவை இரகசியமானவை. இச்சந்திப்புகளில் மதுவுடன் கூடிய விருந்தாகவும், சில வேளைகளில் சில கட்சித் தலைமைகளை தம்வசப்படுத்த பெண்களையும்; பயன்படுத்துவார்கள். இது ஒன்றும் வியப்புக்குரிய விடயமல்ல!

தமது திட்டத்தை நிறைவேற்ற உளவு நிறுவனங்கள் பணம், பொருள், பெண் ஆகியவற்றைப் பயன்படுத்தத் தவறுவதில்லை. அதற்கு றோவும் விதிவிலக்கல்ல.

தூதரக முகவர்கள் அல்லது ஒற்றர்கள் இந்தியாவின் பெரும் வணிகர்களாகக் கூட இருப்பார்கள். இவர்கள் வணிகத்திற்கு பொறுப்பான அமைச்சர்களுக்கோ, கட்சித் தலைமைகளுக்கோ இனவாத விசம் கக்கும் அரசியல்வாதிகளுக்கோ, நட்பு ரீதியாக விருந்தளிக்கும் போது வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல, மிக இயல்பாக ஊரையாற்றுவது போல தமிழர்களுக்கு எதிரான கருத்துகளைச் சொல்வார்கள். இந்தியப் பெரும் வணிகர்கள் இலங்கையில் வணிகத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்களையும் ஒற்றர்களாக றோ பயன்படுத்தி வருகின்றது.

இது தமிழர்களுக்கு எதிரான மனநிலையை சிங்கள வணிகர்களிடத்திலும் கட்சித்



தலைமைகளிடத்திலும், அமைச்சர்களிடத்திலும், இனவாத அரசியல்வாதிகளிடத்திலும் தோற்றுவிக்கும்.

தமிழர்களுக்கு எதிரான வன்முறையை தோற்றுவிக்க, தமிழர் சிங்களவர் மத்தியில் தனிப்பட்ட சச்சரவை உருவாக்கி விடுவார்கள். அது இன ரீதியான பகைமையாக வடிவமைக்கப் பட்டு, ஊதிப் பெருப்பிக்கப்பட்டு ஏதோ ஒரு இடத்தில் தமிழர்களின் வீடுகள், கடைகள் சிங்கள மக்களால் சேதமாக்கப்பட்டும், எரிக்கப் பட்டும் அந்தச் செய்தி நாடடெங்கம் பரவ, ஆங்காங்கே இனக்கலவரங்கள் ஆரம்பிக்கும். இந்த இனக்கலவரம் காட்டுத்தீபோல பரவத் தொடங்கி விடும்.

இனக்கலவரத்தை நடத்திக் கொண்டிருக்கும் சாதாரண சிங்களக் குடிமகனுக்கு ஏன் கலவரம் ஆரம்பித்தது? என்று தெரியவே தெரியாது. சிங்களவர்களுக்கு எதிராக தமிழர்கள் செயல்படுகிறார்கள் என்ற செய்தி மட்டுமே நாலாபுறத்திலுமிருந்து சிங்கள மக்களுக்கு எட்ட, தமிழர்கள் மீது கோபமும், வன்மமும் ஏற்பட்டு தமிழர்களைக் கொல்வதுடன் அவர்களின் உடைமைகளுக்கு சேதமும் விளைவிப்பார்கள்.

இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரங்கள் அத்தனைக்கும் காரணகர்த்தா இந்தியாவின் உளவு நிறுவனமான றோவேதான். இனக்கலவரங்கள்தான் தமிழர்கள் மீது சிங்களவர்களும், சிங்களவர்கள் மீது தமிழர்களும் வன்மம் கொள்வதற்கான அடித்தளத்தை இட்டது. பிடிவாதமாக தமிழர்களின் உரிமை மறுப்புக்கும் அதுவே காரணம்.

இந்தியாவின் உளவு நிறுவனமான றோதான் பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டி விட்டது. எடுப்பார் கைப்பிள்ளையான இலங்கையின் நிலைமைக்கு காரணமே றோதான்.

(தொடரும்)




# காட்டிக் கொடுப்பிலும் இப்படி ஒரு கண்ணியமா?



அவரது தனிப்பட்ட அருமை, பெருமைகளையும், தியாகங்களையும் பேச வேண்டிய நேரம் அல்ல இது. ஆனால், அத்தகைய ஒரு சாதனையைச் சொல்லித் தப்பிக்க முனைகிறார் புலம் பெயர்ந்த தமிழர்களைத் தவளைக் கூச்சல் போடுவதாகச் சிறுமைப் படுத்தும் அந்த மகாகவி.

எங்களின் கூச்சல், தவளைக் கூச்சல்தான். தவளைகள் கூச்சல் போடுவது செத்துப் போவதற்கல்ல. இனப் பெருகம் தேடித் துணையை அழைக்கும் குரல் விடு தூது என்கிற அறிவியல் உண்மை உங்களுக்குத் தெரியுமா? கவிஞர்களுக்குப் பொய் உரைக்கத்தான் தெரியும். சுட்டுப் போட்டாலும் உண்மைகளையும், அறிவையும் பேச மாட்டார்கள்.

70 வருடங்களுக்கு மேலாக பொய் மேல் பொய் உரைத்து நல்லவர்களையும், தமிழரசுக் கட்சியின் அரசியல் எதிரிகளையும் கொலை செய்ய அப்பாவி இளைஞரை வன்முறைப் பாதையில் வழிநடத்திய கூட்டத்தில் வளர்ந்த நீங்கள், யாருக்காக? எதற்காகப் புலிகளுடன் புலி வேடம் போட்டு போராளி என நடித்தீர்கள்?

புதுவை இரத்தின துரை, ஈரோஸ் தலைவர் பாலகுமார், 8 வயதுப் பாலகன் பாலச்சந்திரனுக்கும், அவனது அப்பம்மா 80 வயது மூதாட்டி மேதகு தலைவரின் தாயார் பார்வதி அம்மாவுக்குக் கிடைக்காத உயிர்ப் பிச்சை உங்களுக்கு மட்டும் எப்படிக் கிடைத்தது? இந்த இரகசியத்தை மட்டும் வெளியில் கொஞ்சம் சொன்னால், எங்களின் தவளைக் கூச்சலை நிறுத்த வசதியாக இருக்கும். உங்களது வசதியான வாழ்வுக்கு நாங்களும் இடைஞ்சலாக இருக்க மாட்டோம்.




நீங்களும், உங்களின் தலைவர்களும் நடத்திய உள்ளூர் ஊழல் அரசியலை தெரிந்து கொள்ள முடியாத நீங்களும், மறவன்புலவு சச்சிதானந்தனும் இப்பொழுது இந்தியாவின் மோடி அரசின் ஊதுகுழல் அரசியலைச் செய்வதற்காகப் புலிகளின் அழிவை நடத்த உதவிய தமிழக உதிரிக் கட்சிகளும், நடக்க இருக்கும் ஊரக பாராளுமன்ற மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற வைக்க 2வது வட்டுக் கோட்டைத் தீர்மானம் என்று ஈழத்

தமிழரின் தனிநாட்டு கோரிக்கையை மண் போட்டு மூடிவிட முயலுகிறீர்கள்.

உங்களிடம் திரானியும் ,தெம்பும் இருந்தால் மறவன் புலவு சச்சிதானந்தனுடன் இணைந்து, கிழக்கு மாகாண அரசியலை தொடங்குங்கள். அங்கே தமிழ்த் தேசிய அரசியலைப் பேசும் முன்னாள் வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன், கஜேந்திர குமார் ,பொன்னம்பலம், செல்வராசா, கஜேந்திரன் 6வது திருத்தச் சட்டத்தை ஏற்றுப் பிரிவினைப் பேசாத அரசியலை எப்படிப் பேசலாம்? என்கிற அறிவான கேள்வியைக் கேட்கிறீர்கள்.

இப்படியான சட்டங்களை 1948 இல் இந்திய வம்சாவழிகளின் குடியுரிமை பறித்தது. 1956 தனிச் சிங்கள மொழிச் சட்டம் தமிழ் மொழியை அழித்தது முதல், 1972 இல் ஸ்ரீலங்கா மக்கள் குடியரசு சட்டம், 6வது திருத்தச் சட்டம் 1980 இல் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற அனைத்து தமிழ் இன அழிப்புச் சட்டங்கள் எல்லாம் தடையின்றி நிறைவேறவும், சிங்களத்துக்குத் துணை போனதும் தமிழ் அரசுக் கட்சிதான். அவை சட்டப்படி செல்லாதவை எனத் தெரிந்தும், அவற்றை நீதிமன்றங்களில் தட்டிக் கேட்கவும் செய்யாத சட்டத் தரணிகள் நிறைந்த உங்களது தமிழ் அரசுக் கட்சிதான் என்பதையும் ஏன் சொல்ல மறக்கிறீர்கள்?

செய்யிற எல்லாவற்றையும் செய்து விட்டு, இப்போ அந்த மண்ணில் தமிழர்களின் உரிமைகள் பற்றிப் பேசும் அரசியல்வாதிகளைத் தட்டிக் கேட்க உங்களிடம் என்ன தார்மீக தர்மம் இருக்கு?

ஒரு முறையாவது வட மாகாண சபை நிறைவேற்றிய போர்க் குற்ற விசாரணை தொடர்பான தீர்மானத்தையும், அதனை நேரடியாக அன்றைய ஐ.நா.பொதுச் செயலர் பான் கீ மூனிடம் திரு.விக்கினேசுவரன் அவர்கள் ஒப்படைத்த உண்மையை நினைத்துப் பாருங்கள்.

எங்களின் தாயக மண் மீட்புப் போராட்டம் சர்வதேச சட்டங்களின் அடிப்படையில்தான் அமைய வேண்டும் எனப் பேசிவரும் எங்களின் தமிழ் தேசிய அரசியல் தலைவர்களின் உலக அரசியலை, இந்தியாவின் காலடியில் நசுக்கப்படும் அரசியலை நீங்கள் மட்டும் அல்ல, யார் செய்தாலும் தட்டிக் கேட்போம். தவளைகளாக அல்ல, கரடிகளாக, நரிகளாக, சிங்கங்களாக, புலிகளாகப் போராடி முறியடிப்போம்.




# உள்ளம்

## திறக்கும் உண்மைகள்

“உளம் திறக்கும் உண்மைகள்...” என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.



### குற்றவாளி

சுவாசிக்கும் காற்று
சுத்தமில்லையெனில்
குற்றத்துக்குரியது
பூமியல்ல,
நாம்தான்.


### காடு

காடுகள்
இருக்கும்வரைதான்
நாடுகளும் இருக்கும்.
காடழிப்பவன் கோடரி
வெட்டுவது மரத்தையல்ல,
தன் கழுத்தை..



### வறட்சி

மனிதர்
கவலை கொண்டால்
கண்ணீர்.
மழை
கவலைகொண்டால்
வறட்சி.
இயற்கை எப்போதும்
வித்தியாசமானது



### மரம்

மரங்களை
அழித்துவிட்டாலும்
மனிதன் வாழலாம்.
புதைகுழிக்குள்...

# அகர கவிக்களம்....



## அன்பு

அன்பெனப்படுவது
வேறொன்றுமில்லை
என்னால் - நீ அழுவாய்
ஓர் நாள்
எனக்காக நீ அழுவாய்
அவ்வளவே!!!




## தனிமை!!

தனிமை வரம் தான்,
அதிகம் நம்பிய
ஒருவரிடம் ஏமாந்து
போகாதவரை!!!



## சிரிப்பு

யாரிடமும் நிலையான
அன்பை எதிர்பார்க்காதே,
மனிதன் நிலையான
அன்பை காட்டுப்பவன் இல்லை,
எங்காவது எனக்காக
காத்திருக்கிறாயா
ஒற்றை மழைத்துளியாய்
என்மீது விழுந்துப்போ
நான்
பல நாட்களாகிறது!!!



## உடைந்த காதல்

கருகிய மலரில்
மதுரம் தேடுகிறது
வழியற்ற தேனீக்கள்....
உடைந்த காதலில்
நினைவுகளை மீட்கிறது
வலி நிறைந்த நெஞ்சங்கள்!!!

அபி இத்தாலி

## நாளை நம் கையில்

ஆசைகள், கனவுகள்
எத்தனையோ!
நனவாகும் என்ற
நம்பிக்கையில் பார்த்து
காத்துக் கொண்டிருக்கும்
நமக்கு
பட்சணத்திற்கு பணம்
பட்டியல் மட்டுமே
போட வைக்கின்றது...
விமர்சிக்கும் சமுதாயமே!
எம்மைப் போன்ற ஏழையின்
விடியலிற்கு
எப்படி ஒளிவீசும்!
நாளை என்பது நம் கையில்
மட்டுமே...

● அகல்யா இலங்கை



## மகுடம்

புற்றுக்குள் இருந்த
புல்லுருவிகள்.
புகழ் தேடித்
திரியுது.
மலை மேலே ஏறிநின்று
மகுடம் சூடத் துடிக்குது.
மனித நேயமோ
மண்ணுக்குள் புதையுது.
மனிதனின் மாறு நிலை
இதுவே!

கெங்கா ஸ்ரான்லி

சண் தவராஜா





# எது தமிழர் கலாசாரம்?

புலம்பெயர் நாடுகளில் ஆலயங்களை அமைத்தும், புதுப்பித்துக் கொண்டும் இருக்கும் பலரும் தமது செயற்பாடுகளுக்கான காரணங்களுள் ஒன்றாக 'தமிழர் கலாசாரத்தை எதிர்காலச் சந்ததிக்கு அறிமுகம் செய்தல்" எனக் குறிப்பிடுவதை எம்மில் பலரும் பார்த்திருப்போம்.

ஆலயங்களுக்கும் தமிழர் கலாசாரத்துக்கும் உண்மையிலேயே தொடர்பு இருக்கிறதா? இந்துக்கள் என்று தம்மை அழைத்துக் கொள்வோர் எதனால் இந்துக் கலாசாரத்தை (?) தமிழர் கலாசாரம் எனக் கருதுகின்றார்கள்? இரண்டும் ஒன்றா? வேறு வேறானவையா? அல்லது ஒன்றுக்கு ஒன்று தொடர்பானவையா? இவர்கள் கருதும் இந்துக் கலாசாரமே தமிழர் கலாசாரம் என்றால், இந்து சமயம் என்ற ஒன்று உருவாகுவதற்கு முந்திய தமிழர் கலாசாரத்தின் பெறுமானம் என்ன? என்பது போன்ற கேள்விகள் எழுகின்றன.

இத்தகைய கேள்விகளுக்கு விடை தேடப் போகும் போது உண்மையில் தமிழர்கள் யார்? என்ற கேள்வி எழுகின்றது. ஒரு மக்கள் கூட்டத்தின் கலாசாரத்தைத் தீர்மானிப்பது சமயம் தானா? அல்லது அதனையும் கடந்த வேறு பண்பாட்டு, விழுமியக் கூறுகள் உள்ளனவா?

திராவிட இனத்தைச்

சேர்ந்தவர்களான தமிழர்கள் உலகின் மூத்த குடிகளுள் ஒருவராகக் கருதப் படுபவர்கள். தமிழ்நாட்டின் கீழடி, கொந்தகை, சிவகளை, ஆதிச்சநல்லூர், கொடுமணல், தாமிரபரணி ஆகிய இடங்களில்; நடைபெற்ற அகழ்வாராய்ச்சியின் சான்றுகள் தமிழர்களின் வரலாற்றை ஆகக் குறைந்தது ஆறாயிரம் வருடங்களுக்கு முந்தியது என வரையறுக்கப் போதுமானதாக உள்ளன.

மேலும் அகழ்வாராய்ச்சிகள் தொடரும் போது, இந்தக் காலகட்டம் இன்னும் அதிகமானது என்ற சான்றாதாரங்கள் கிட்டக் கூடும். இறுதியாக கீழடியில் கிடைத்த சான்றுகளில் இருந்து இதுவரை ஆதித் தமிழர்களின் வழிபாடு தொடர்பான ஆதாரங்கள் எதுவும் கிட்டவில்லை. அதிலிருந்து கொண்டு ஆதித் தமிழர்கள் மத்தியில் வழிபாடுகள் எதுவும் இருந்திருக்கவில்லை என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது. எனினும், ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு சமயம் இருந்திருக்கவில்லை என்ற முடிவுக்கு வர முடியும்.

மறுபுறம், இன்று உலகில் உள்ள பெரும்பாலான சமயங்களின் தோற்றங்கள் 2,000 முதல் 3,000 ஆண்டுகளுக்கு உள்ளேயே நிகழ்ந்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். இன்று தமிழர்கள் மத்தியில் பிரபலமாக விளங்கும் இந்து சமயம் என்பது கூட, சுமார் மூவாயிரம் வருடங்களுக்கு முன்னர் கைபர் கணவாய் வழியாக, தற்போதைய இந்தியாவிற்குள் புகுந்த ஆரியர்களின் சொத்து என்பதே அறிஞர்களின் கருத்து.

மூட நம்பிக்கைகளின் அடிப்படையிலான கட்டுக்கதைகளை ஆதாரமாகக் கொண்ட இந்து சமயத் திணிப்பை(?) இந்தியாவின் பூர்வ குடிகளான திராவிடர்கள் ஆயுதம் கொண்டு எதிர்த்தார்கள். புத்தர் போன்ற மகான்கள் மூட நம்பிக்கைகளுக்கு எதிரான தத்துவங்களைக் கொண்டு எதிர்த்தார்கள். வஞ்சகம், சூழ்ச்சி போன்றவற்றில் கை தேர்ந்தவர்களான ஆரியர்கள் தமது கட்டுக் கதைகளைக் கொண்டும், மந்திர தந்திரங்களைப் பயன்படுத்தியும் ஆட்சியாளர்களைத் தம் வசப்படுத்திக் கொண்டார்கள்.

இன்னொருபுறம், புத்தர் போன்ற தத்துவவாதிகளை தாமும் ஏற்றுக் கொள்வது போன்று நடித்து, அந்தத் தத்துவத்தையே அழித்தொழிக்கும் வேலைகளில் ஈடுபட்டார்கள்.





பிற்காலத்தில், ஆரிய மதத்தைப் பின்பற்றிய தமிழர்களைப் பாவித்தே மக்களின் மதங்களாக விளங்கிய பௌத்தம், வைணவம் போன்றவற்றை அழித்தொழிக்கும் வேலைகளிலும் ஈடுபட்டார்கள். நடப்புக் காலத்தில் இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற பிற்காலத்தைய மதங்களுக்கு எதிராகச் செயற்படுவதே இந்துக்களின் கடமை என்பது போன்ற தோற்றப்பாட்டை உருவாக்கி வருகின்றார்கள்.

தமிழ் மக்களின் மூத்த நூல் என அறியப்படும் தொல்காப்பியத்தில் சமயம் என்ற பேச்சுக்கே இடமிருக்கவில்லை. இறை வழிபாடு பற்றிக் கூறப் பட்டிருந்தாலும், சமயம் பற்றிய குறிப்புகள் பண்டைய தமிழ் இலக்கியங்களில் இருந்ததில்லை. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்கிறது புறநானூறு. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்கிறது வள்ளுவம். எனவே, தமிழர்களின் பண்பாடு இதுவாகவே இருக்க முடியும்.

ஆனால், மனு ஸ்ருமதியின் அடிப்படையில் அமைந்த இந்து சமயம் மனிதர்களை நான்கு வர்ணங்களாகப் பிரிக்கிறது. சாதிய அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளை வலியுறுத்துகிறது. தீண்டாமையை முன்மொழியும் இந்து சமயம் சூத்திரர்கள் என வரையறுத்து, உழைக்கும் மக்கள் கல்வி கற்பதை மறுக்கின்றது. பெண்களை மானிடப் பிறவிக்கும் குறைவானவர்களாகச் சித்திரிக்கின்றது.

இத்தகைய பிற்போக்குத் தனங்களைக் கொண்ட, மனித குலத்திற்கு விரோதமான கொள்கைகளை உடைய இந்து சமயப் பண்பாட்டை(?) தமிழர் பண்பாடு என ஏற்றுக் கொள்ள முடியுமா? இது மடமை அல்லவா? இந்தப் பண்பாட்டையா புலம்பெயர் தமிழர்கள் தமது எதிர்காலத் தலைமுறைக்கு முதுசமாக வழங்கக் காத்திருக்கின்றார்கள்?

இந்து சமயம் என்ற சொல்லையே அறிமுகம் செய்து வைத்தவர்கள் காலனித்துவவாதிகளான வெள்ளையர்களே. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி, இந்தியாவில் வாழும் யாரெல்லாம் இஸ்லாமியர்கள் இல்லையோ, கிறிஸ்தவர்கள் இல்லையோ, சீக்கியர்கள் இல்லையோ, ஜைனர்கள் இல்லையோ அவர்கள் அனைவரும் இந்துக்கள் என வரையறுக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு குறிப்படப்படும் இந்துக்களின் வழிபாட்டு முறைமைகளில் வடக்கிற்கும், தெற்கிற்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளதை அவதானிக்க முடியும். தமிழர்களின் கடவுள் என வர்ணிக்கப்படும் முருகனுக்கு வட மாநிலங்கள் எங்கும் கோயில்கள் இல்லை. வடக்கில் அதிகமாகக் கொண்டாடப்படும் இராமனுக்கு தெற்கில் கோவில்கள் இல்லை. அதேபோன்று தமிழ் நாட்டிலும், ஈழத்தின் பெரும்பாலான பகுதிகளிலும் காணப்படும் குல தெய்வ வழிபாடுகள், சிறு தெய்வ வழிபாடுகள் போன்றவை திராவிடர்களுக்கு, குறிப்பாக தமிழர்களுக்கு மட்டுமே தனித்துவமானவையாக உள்ளன.

1960, 70களில் இலங்கைப் பாடசாலைகளில் படித்தவர்களுக்கு சமய பாடமாக 'சைவ சமயம்' படித்தது ஞாபகம் இருக்கக் கூடும். அதுவே 1980களில் 'இந்து சமயமாக' மரியதையும், இந்து சமய

கலாசார அமைச்சு என்ற பெயரில் அமைச்சகம் ஒன்று அமைக்கப்பட்டதும் நினைவில் வரக் கூடும். 50, 60 வருடங்களில் நிகழ்ந்த மாற்றம் இது. ஆறுமுக நாவலர் எழுதிய 'சைவ சமய வினா விடை' என்ற நூலை உருப்போட்டு 'கொழும்பு விவேகாநந்த சபை' நடாத்திய பரீட்சைகளில் பங்கு கொண்டு நம்மில் பலரும் சான்றிதழ்கள் பெற்றிருப்போம்.

அது மாத்திரமன்றி தமிழர்களில் சமண சமயத்தைப் பின்பற்றியோர் இருந்துள்ளனர். பௌத்த சமயத்தை, இஸ்லாமிய சமயத்தை, கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றுவோர் அன்று முதல் இன்று வரை உள்ளனர். இவர்களோடு சித்தர் பரம்பரையில் வந்த கணிசமான எண்ணிக்கையிலான இறை மறுப்பாளர்களும் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் தமிழர்கள் என ஏற்றுக் கொண்டால், பிற்போக்குத் தனமான, மூட நம்பிக்கைகளைக் கொண்ட இந்துப் பண்பாட்டை இவர்கள் அனைவருக்குமான பொதுப் பண்பாட்டாகக் காட்சிப்படுத்த முனைவது எந்த வகையில் நியாயம்?

பண்பாடு என்பது மதம் சார்ந்ததாக இருக்க முடியாது. அது மக்களின் வாழ்வியல் சார்ந்தது. தற்காலத்தில் உலகில் மிகவும் இறுக்கமான சமயமாகக் கருதப்படும் இஸ்லாமிய சமயத்தைப் பின்பற்றுவோரில் அவர்கள் வாழுகின்ற நாட்டைப் பொறுத்து அவர்களின் பண்பாடு மாறுபடுவதை அவதானிக்க முடியும். இது அனைத்து மதத்தினருக்கும் பொருந்தும்.

தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் அனைத்து மதங்களையும் எதிர்க்கும் ஆசீவக வழி வந்தவர்கள் என்கின்றனர் முன்னோர்கள். அறிவியலின் அடிப்படைகளான ஏன்? எதனால்? எதற்கு? என்ற கேள்விகளுக்கான விடைகளைக் காண முயன்ற சித்தர்களின் மார்க்கமாக அது இருந்தது.

அத்தகைய பண்பட்ட செல்நெறியின் வழிவந்த தமிழர்கள், இடைச்செருகலான இந்து சமயத்தின் மூடப் பழக்க வழக்கங்களைத் தமது பண்பாடு எனக் கருதுவது மட்டுமன்றி, தமது எதிர்காலச் சந்ததிக்கும் அதனையே பண்பாடாக வைத்துவிட்டுப் போவதாகச் சொல்வதும் வடிகட்டிய முட்டாள்தனமின்றி வேறல்ல.

வரலாறே எமக்கு ஆசான் எனில், அந்த வரலாற்றை ஆய்வுக்கு உட்படுத்தி, உண்மையைக் கண்டறிந்து தெளிவது எமது பொறுப்பு. செய்வோமா?


ஆசியா சமுத்திரம்
Asiatischer Supermarkt

Parkhofstrasse 101
41836 Hückelhoven
Tel : 02433 903282
Fax : 02433 903281

Deutschebank
IBAN : DE55 3907 0024 0474 1153 00
Bic : DEUTDEDB390
email : mediajara@gmail.com

துரித பணமாற்றுச் சேவை
VALUTRANS MONEY TRANSFER · Ria · MoneyGram · TEMPO MONEY TRANSFER



# என்ன கொடுமை சரவணா!...



கல்லெறி வேலுப்பிள்ளை

**வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?**

**சுகமா இருக்க விடுறாங்கள் இல்லை எண்டு நீங்கள் முணுமுணுக்கிறது கேக்குது பாருங்கோ. அது ஆர் எண்டு நான் கேட்க விரும்பேல்லை. ஏனெண்டால் நீங்கள் தரப்போற பட்டியல் நீளும் பாருங்கோ. அதனால அதை விடுவம். ஆனால்; சுகமா உடல்நிலையை விட மனநிலை சுகமா இருக்கவேணும் எண்டால், நீங்கள் மனதைத் தெளிவாகவும், சுயசிந்தனைக்குட்படுத்தியும் வைத்திருக்கவேண்டும் பாருங்கோ. அது கொஞ்சம் கடினமான வேலைதான். ஆனால் முயற்சிக்க வேணும் கண்டியளோ.**

உங்கட நோய்க்கு இதுதான் மருந்து எண்டு சிலபேர் தருவான், ஆனால் உங்களுக்கு உண்மையிலேயே அந்த நோய் இருக்கோ எண்டு சிந்திக்கவேணும். இதுதான் உண்மை எண்டு சில பேர் பொய்யைச் சொல்லுவான், அவன் ஏன் இதை அவசரமாச் சொல்லுறான் வேண்டும், அவனுக்கு ஏதோ இலாபம் இருக்குதோ எண்டும் சிந்திக்கவேணும். உதையெல்லாத்தையும் விடுங்கோ. நீங்கள் சொல்லுறதெல்லாமே பிழை, நான் சொல்லுறதுக்கு நீங்கள் கட்டுப்பட்டு இருக்கவேணும் எண்டு மேதாவித்தனமா புலம்புறவனோடையும் அதிகவனமாக இருக்கவேணும். ஏனெண்டால் அவனுக்கு அதாலதான் உழைப்பே நடக்குது எண்டதையும் நீங்கள் உணரவேணும் பாருங்கோ.

விசயம் என்னெண்டாப் பாருங்கோ; இப்ப கிட்டடியில உலகமெல்லாம் வாழுற தமிழ்ப்பிள்ளைகளுக்கு எண்டு பாடப்புத்தம் வெளியிட்ட மேதாவிக்கும்பல் பற்றிக் கேள்விப்பட்டிருப்பியள். அவையின்ர நோக்கம் காசு பணம் துட்டு மணி மணி தான் பாருங்கோ. ஏனெண்டால் நான் சொல்லுறதுதான் சரி எண்ட கணக்கில அவை பண்ணுற அட்டூழியத்தை நியாயப்படுத்தவும், அது தான் சரியெண்டு வக்காளத்து வாங்கவும் ஒரு

கூட்டம் இருக்குது எண்டுறதோட, அவைதான் தமிழுலகை மீட்கவந்த மீட்பர்கள் எண்ட கணக்கில விழாக்களுக்கு அழைச்சு மாலை போட்டு, வெட்டப்போற ஆட்டைக் கொண்டு போற மாதிரி மேடைக்கு முன்னால இருத்திவிடுவினம். பிறகு அவை இடைக்கிடை ஒரு குட்டி நித்திரை அடிச்சுப்போட்டு எழும்ப மாறி மாறி வடை, தேத்தண்ணி எண்டு போசாக்கு உணவுகள் வழங்கப்படும்.

அதைஎல்லாத்தையும் முழுங்கிப் போட்டு, முழு ஆட்டை விழுங்கின மலைப்பாம்பு கணக்கில மேடையில ஏறிநிண்டு, இதுதான் விடுதலை, மற்றதெல்லாம் தறுதலை எண்டு சம்பந்த சம்பந்தமில்லாமல் அடிச்சுவிட, ஆகா ஓகோ இதெல்லவோ பேச்சு எண்டு கைத்தட்டவும் ஒரு கூட்டம் இருக்குது பாருங்கோ. முதலில இவங்களுக்கு வெளுத்தால் எல்லாம் சரிவரும் பாருங்கோ. ஆக மொத்தத்தில இப்பிடியான ஆட்களை வளர்த்து விட்டதில எங்கட ஆட்களுக்கும் பங்கு இருக்குபாருங்கோ.

அதில நான் வயிறு குலுங்கச் சிரிச்ச பகிடி என்னெண்டால்; தங்கட தமிழ்ப் பள்ளிக்கூடத்தில படிச்சதால தான், ஒரு பெடியனுக்கு சிங்கப்பூர் விமான சேவையில வேலை கிடைச்சது எண்டு ஒரு மகா கண்டுபிடிப்பை தனது பேச்சில் உதிர்த்து விட்ட சுடுகாட்டு லொக்குபண்டா வை நம்பி இன்னும் ஒரு கூட்டம் அலையுது எண்டதை நினைக்க எனக்கு கண்ணெல்லாம் வியர்க்குது பாருங்கோ.

உதே கூட்டம்தான் இப்ப உந்தப் பாடப்புத்தகத்தையும் இஞ்ச ஐரோப்பாவில திணிக்குது பாருங்கோ. அந்தப் பாடப்புத்தகத்தில இருக்கிற அத்தனையும் வரலாற்றுத் திரிபு எண்டு பலர் எடுத்துச் சொல்லியும், ஆண்டு - 3 தொடக்கம் ஆண்டு - 11 வரை அத்தனை பாடப்புத்தகங்களையும் அவசர அவசரமாக பிள்ளையளின்ர கையில திணிச்சிருக்கினம் உந்த லொக்குபண்டா குழுவினர். வாங்குறவன் வாங்கு, வாங்காதவன் நீங்கு எண்ட சுலோகத்தைக் கையில ஏந்தியபடி வெளியிடப்பட்ட இந்த நூல் சம்பந்தமாக பல எதிர்ப்புக்குரல் உலகமெங்கும் ஓங்கி ஒலிக்க ஆரம்பிச்சிருக்கு பாருங்கோ. ஆனால் அது பற்றியெல்லாம் கவலைப்படாமல் எதிர்வரும் மூன்று வருசத்துக்குரிய பாடநூலை வாங்கி வைச்சிட்டம், அதை வித்துமுடிக்கும் வரை புத்தகத்தை மீளப்பெற முடியாது எண்டு கதைவிட்டிருக்கிறார் திருவாளர் லொக்குபண்டா.



உவருக்குக் கீழ கைகட்டிச் சேவகம் செய்யுற சில “மாஸ்டர்” களுக்கு இந்தப் புத்தகத்தில உள்ள விபரீதம் புரியாமல், பலமான கதைகளை அடிச்சு விடுகினம் பாருங்கோ. அதாவது என்னவெண்டால் ; இஞ்ச வாழுற தமிழ்ப்பிள்ளைகளுக்கு என்ன படிப்பிக்கினம் எண்டதை, இந்த நாட்டுக் காவல்துறை கூர்ந்து கண்காணிக்குதாம். அதனால எங்கட வரலாற்றைக் குழைச்சுப் புட்டு வைச்சு, காவல்துறையின்ர கண்ணுக்குத் தெரியாமல் மூடிவிட்டிருக்கினமாம் பாருங்கோ. உந்த விளக்கம் தந்தவருக்கு செவிப்பறை கிழிய வெளுத்திருந்தால் உந்த ஒத்தூதுற வேலைக்கு ஆள் இனிப் போகாது எண்டு நினைக்கிறன்.

இயக்கர், மற்றும் நாகர் தான் இலங்கையின் தொல்குடிகள் எண்டு பாடப்புத்தகத்தில எழுதுறதில என்ன பயங்கரவாதம் இருக்கெண்டு எனக்குத் தெரியேல்லை. யாழ் நூலகத்தை எரிச்சது சிங்கள அரச படைகள் தான் என்ற உண்மையை எழுதுவதில் என்ன பயங்கர வாதம் இருக்கெண்டு எனக்குத் தெரியேல்லை. எங்கட மண்ணிலே வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள், அறிஞர்கள், மாமனிதர்கள் பற்றி எழுதுறதில என்ன பயங்கரவாதம் இருக்கெண்டு எனக்குத் தெரியேல்லை. அதெல்லாம் பயங்கரவாதம் எண்டால்; ஏன் வருசாவருசம் நீங்கள் ஐ.நா வாசலிலே நிண்டு, எங்கட உரிமை தமிழீழம் எண்டு கூக்குரல் போடுறியள் ?

இஞ்ச எங்கேயுமே தமிழீழம் எண்ட சொல்லைச் சொல்லுவதற்கோ, தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றுவதற்கோ, அல்லது தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் எண்டு சொல்லுறதுக்கோ தடையில்லை எண்டுறது எல்லாருக்கும் தெரியும். பிறகென்ன பயங்கரவாதமும் பயித்தங்காயும் எண்டு கதை விடுறியள்? எங்கட போராட்டத்தையும், இன எழுச்சியையும் பயங்கரவாதம் எண்டு முத்திரை குத்துறது நீங்கள் தானே தவிர, வேற யாரும் இல்லை. உந்தத் திறத்தில, மாவீரர் நாளண்டு தேசியக்கொடிக்கு முன்னால நிண்டு சல்யூட் அடிச்சு வணக்கம் போடுற நாடகம் வேற பிரமாதமாக நடக்கும்.

அதில, வெள்ளைச் சட்டை, நீலச்சேலை, சிவப்பு மஞ்சள் சேலை எல்லாம் வரிசையா நிண்டு அடிக்கிற சல்யூட்டை பார்த்தால், இந்தா இப்ப சிங்களத்தை நோக்கிப் படையெடுக்கிறம் எண்ட மாதிரித்தான் விறைப்பா நிப்பினம் பாருங்கோ. ஆனால், சந்ததிக்கான கல்வியைக் குழப்பி அடிச்சு பொய்யான வரலாறு எழுதி விக்கிறதோட, எங்கட போராட்டத்தையும் பயங்கரவாதம் எண்டு தாங்களே சொல்லிப்போடுவினம்.

உந்தப்பாடத்திட்ட ஆலோசனைக் குழுவில உள்ள ஆக்களுக்குள்ள. மூன்று பேரா(புத்தான)சிரியர்களும் இருக்கினம். ஒருத்தர் யாழ்ப்பாணத்திலே இருந்து சிங்கள அரசின் தொல்லியல் துறைக்கு எடுபிடியாக இருப்பவர் கண்டியளோ. யாழ்ப்பாணத்திலே நடக்கிற என்ன அகழாய்வு எண்டாலும், அதை உடனே சிங்கள அரசுக்கு அறிவிச்சு, அகழாய்வில் கிடைக்கிற விடயங்களை உடனடியாக சிங்களத் தொல்லியல் துறைக்கு மாற்றுவார் பாருங்கோ. ஆள் ஏற்கனவே டக்கர் தேவானந்தாவின்ர சீடப்பிள்ளை.

இப்ப மகனை கூட்டமைப்புக்குள்ள கொண்டுவாறதுக்கு சுமந்திரன் ஊடாக கயிறு விடுவதாகவும் சொல்லுகினம். அவர் இந்தப் பாடத்திட்ட ஆலோசனைக் குழுவிற்குள்ள வந்தால் எப்பிடி இருக்கும் எண்டு நீங்களே சிந்தியுங்கோ பெருமக்களே. மற்ற இருவரும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். அதிலும் மலாயா பல்கலைக் கழகத்தில இருக்கிற பேராசிரியர், ஈழத்தமிழரின்ர போராட்டத்துக்கு எதிரான நபர். சும்மா தமிழ் தமிழ் எண்டு கதையை விட்ட உடன, எங்கட வரலாறு தெரியாத ஆட்களை யாரின்ர வழிகாட்டுதலுக்கு இணங்கி



வாடிக்கையாளர்களின்
பேராதரவுடன்
19ஆம் ஆண்டில்....
யாரும் கண்டிராத மலிவு விலையில்
இந்த வருடத்தின் புத்தாடைகள்
வாங்கிட எம்மை நாடவும்...
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
சிறப்பு அதிரடித்
தள்ளுபடி விற்பனை
ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648
மாபெரும்
ராஜ
முத்திரை

ஈழத்தமிழர் பாடநூல் எழுத அழைச்சு வந்தவை எண்டு தெரியாமக் கிடக்கு பாருங்கோ.

அதிலயும் உந்தப் பாடப் புத்தகத்தைத் தாங்கள் இரண்டு வருசத்துக்கு ஏற்ற அளவுக்கு கொள்வனவு செய்து வைச்சதால, வேணுமெண்டால் இரண்டு வருசத்துக்குப் பிறகு புத்தகம் மீளப்பெறுவதைப் பற்றி யோசிக்கலாம் எண்டு லொாக்கு பண்டா கதை விட்டிருக்கிறார். உவருக்குச் சரியான வைத்தியம் என்ன தெரியுமே ? இரண்டு வருசத்துக்கு உவரின்ர மலவாசலுக்கு தக்கை வைச்சு அடைச்சு விட்டிட்டு, இரண்டு வருசத்துக்குப் பிறகு எடுக்கலாம் எண்டு தீர்ப்புக் குடுக்கவேணும் பாருங்கோ. இல்லைத் தெரியாமக் கேக்கிறன், நீர் நஞ்சை வாங்கிச் சேமிச்சு வைச்ச பாவத்தை, ஏன் இந்தச் சந்ததி சுமக்க வேணும் எண்டு தலைவிதியோ?.

இந்தப் புதிய பாடநூலின்ர விவரம் தெரியாமல் வக்காளத்து வாங்குற ஆக்கள், இந்தப் பாடநூலை விமர்சிக்கிற ஆக்களைத் தனிநபர் விரோதியாகச் சித்தரிக்கிற ஆக்கள், பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டிருக்கிற புத்தகங்களை வாங்கி ஆழமாக வாசியுங்கோ. தமிழர்கள் இலங்கையின் வந்தேறிகள் என மறைமுகமாக எழுதப்பட்டிருக்கும் இந்தப் பாடநூல் எங்கட தலைமுறைக்குத் தேவையோ எண்டு சிந்தியுங்கோ.

காசு வந்தால் போதும் என சில அரைகுறை மேதாவிகள் செய்யும் சதித் திட்டங்களுக்கு எங்களது இனத்தையும், வரலாற்றையும் விற்கக்கூடாது எண்ட நினைப்போடு எல்லாரும் குரல் குடுக்கவேணும் கண்டியளோ.

**பொய்யைச் சொல்லி வயிறு வளர்ப்பார்**
**பொன்னென்று சொல்லி செப்பைத் தருவார்**
**கண்ணைத் திறந்து சிந்திக்க**
**மறுத்தால் மண்ணுக்குள் உன்னைப்**
**புதைத்தே கொல்வார்**

- அப்ப வரட்டே







# ஆப்கானை விட்டு விலகியது அமெரிக்கா

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆப்கானிசுத்தானில் அமெரிக்கப் படைகள் நிறுத்தப்பட்டிருந்ததால், அமெரிக்கா பல முனைகளில் அதற்கான விலையைக் கொடுத்துள்ளது. இதுவரையான போரில் 2,448 அமெரிக்க ராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர். மூவாயிரத்துக்கும் மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள் பலியாகியுள்ளனர். மனித உரிமை உதவியாளர்கள் 400 பேருக்கு மேல் பலியாகியுள்ளனர். 47 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆப்கன் மக்கள் இறந்துள்ளனர்.

ஆப்கானிசுத்தானில் தீவிரவாதிகளை வேரறுக்க நடத்தியதே, அமெரிக்கா இதுவரை நடத்தியதில் மிக நீண்ட போர். இதற்காக அவர்கள் செலவழித்தது சுமார் 164 லட்சம் கோடி ரூபாய். கிட்டத்தட்ட இலங்கையின் ஓராண்டு நிதிநிலை போல நான்கு மடங்கு தொகை. அமெரிக்கப் படையினர், ஆப்கன் ராணுவத்தினர், அப்பாவி மக்கள் என 20 ஆண்டுகளில் சுமார் இரண்டு லட்சம் உயிரிழப்புகள். இப்போது முன்பைவிட பலம் பெற்று ஆப்கானிசுத்தானின் அதிகாரத்தைத் தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர்.

பொருளாதார நோக்கிலும் அமெரிக்கா பெரும் விலை கொடுத்துள்ளது. இந்நிலையில் தலிபான்களிடம் நாட்டைக்கொடுத்துவிட்டு அமெரிக்கா விலகுவதன் மர்மம் என்னவென்பது பெரிதொன்றுமில்லை.



தலிபான் என்ற சொல்லுக்கு “மாணவர்கள்” எனப் பொருள். தலிபான் என்ற சொல் பாஸ்தோ மொழியைச் சேர்ந்தது. அந்த அமைப்பு 1994ஆம் ஆண்டு ஆப்கானிசுத்தானின் தெற்கு பகுதியில் உள்ள கந்தரில் உருவாகிறது. சோவியத் யுனியன் பிளவுபட்ட பின்பு நாட்டை தங்களுக்கானதாக மாற்றும் பல அமைப்புகளில் ஆப்கானிசுத்தானைத் தனக்காக மாற்ற உள்நாட்டுப் போரை நடத்தி வரும் அமைப்புதான் தலிபான்.

அமெரிக்கா தலைமையிலான மேற்குலகப் படைகள் அந்நாட்டை விட்டு வெளியேறும் நிலையில், தாலிபன்கள் புதிய புதியப் பகுதிகளை அரசாங்கப் படைகளிடமிருந்து பறித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆப்கானிசுத்தானை இரான், துர்க்மெனிசுத்தான் ஆகிய நாடுகளுடன் இணைக்கும் எல்லைப்புறங்களைக் கைப்பற்றியிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இரான் அருகே உள்ள இசுலாம் குவாலா, துர்க்மெனிசுத்தான் அருகே உள்ள தொர்குண்டி ஆகிய எல்லையோர நகரங்களைத் தாங்கள் கைப்பற்றிவிட்டதாகத் தலிபான்களும் கூறுகின்றனர்.

இசுலாம் குவாலா எல்லைப் பகுதி ஆப்கானிசுத்தான் - இரான் இடையிலான மிகப் பெரிய வணிக நுழைவாயில். இந்த எல்லை வழியாக நடைபெறும் வணிகத்தின் மூலம் ஆப்கன் அரசுக்கு மாதம் 2 கோடி அமெரிக்க

டொலருக்கு நிகரான வருமானம் வரும். அதைப் போலவே தொர்குண்டி நகரம், துர்க்மெனிசுத்தானுடனான வணிக நுழைவாயிலாக உள்ளது.

இந்த இரு எல்லைப்புற நகரங்களையும் மீண்டும் கைப்பற்ற ஆப்கன் படைகள் முயற்சி செய்துவருவதாக அந்நாட்டு உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் தாரெக் அரியான் கூறியுள்ளார். கெராட் மாகாணத்தில் 5 மாவட்டங்களை சண்டை இல்லாமலேயே தலிபான்கள் கைப்பற்றிவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

400 மாவட்டங்களில் மூன்றில் ஒரு பங்கை தலிபான்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்கொண்டு வந்துவிட்டதாகத் தகவல் வருகிறது. நாட்டின் மேற்குப் பகுதியில் இரான் எல்லைப்புறத்தில் தொடங்கி, நாட்டின் மறுபுறத்தில் சீன எல்லைப்புறம் வரை ஒரு வளைகோடு போல இந்தத் தாலிபன் கட்டுப்பாட்டுப் பகுதி பரவியிருக்கிறது. ஆப்கானிஸ்தான் இந்தியாவைச் சுற்றியுள்ள பகுதி. இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கையிலும் சிக்கல், மியான்மரிலும் பிரச்சினைகள், நேபாளில் பல்வேறு எதிர்வினைகள். சீனா இதையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு இந்தப் பிராந்தியத்தில் தன்னுடைய ஆதிக்கத்தைச் செலுத்தப் பார்க்கிறது.

வளைகுடா நாடுகளிலிருந்து சீனாவுக்கு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு உருவாக்கப்பட்ட திட்டம்தான் பட்டுப்பாதைத் திட்டம். இது இந்தியாவைச் சுற்றி ஆப்கான் வழியாக வரக்கூடிய திட்டங்களில் ஒன்று. இந்துமகா சமுத்திரத்தில் ஒரு பக்கம் என்றாலும், ஆப்கான் வழியாக இது செல்கின்றது. வியாபார அளவில் ஐரோப்பா, மத்திய ஆசிய பகுதிகளுக்குச் செல்லக்கூடிய சாலை மார்க்கங்களுக்கு ஆப்கான் முக்கிய தளமாகும். ஆசியா- ஐரோப்பாவின் சரக்குப் போக்குவரத்து போன்ற தரைவழி மார்க்கமாகச் செல்லக்கூடிய பாதைகளில் பிரச்சினைகள் ஏற்படும்.

சீனாவின் பட்டுப்பாதை ஊடாகப் புறப்படும் தொடருந்துத் தடமும் ஆப்கன் ஊடாகவே யேர்மனி வரை செல்கிறது. இந்த இரு விடயங்களூடாகவும் சீனாவின் ஒட்டுமொத்த ஆண்டு வருமதியானது அமெரிக்காவின் கையை மீறிப்போயிருக்கிறது. நவீன உலகில் சீனாவின் பொருளாதாரத்தை உடைத்தெறிய ஆப்கானையும், சீனாவையும் மோதவிட்டு, சீனாவைச் சிதைப்பதற்காக அமெரிக்கா எடுத்திருக்கும் முதல் நகர்வே இதுவாகும்.



# பிரபாகரனின் மாமனிதர்களில் ஒருவர்

## ஓவியர் ஞானரதன்



1940 ஆம் ஆண்டு இதேபோலொரு நாளில் 22.05.1940 பிறந்தவர்தான் ஞானரதன் அல்லது சொர்ணன் என அன்போடு அழைக்கப்பட்ட, ஈழத்தின் தலைசிறந்த ஓவியர் மாமனிதர் வை. சச்சிதானந்தசிவம் அவர்கள்.

வை. சச்சிதானந்த சிவம் என்ற இயற்பெயர் கொண்ட கலையாளன்தான் மாமனிதர் ஞானரதன். இவர் மே மாதம் 22 ஆம் திகதி, 1940ஆம் ஆண்டு, யாழ்ப்பாணத்தின் வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தின் வடக்கே வலிகாமம் பகுதி நிர்வாகப் பிரிவில், வலிவடக்கு பிரதேச சபையின் கீழும், தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழும், காங்கேசன்துறை தேர்தல் தொகுதியின் கீழும் அடங்குகின்ற இயற்கை எழில் கொஞ்சும் பச்சைப் பசேலென விதைத்து விளைந்து பரந்து கிடக்கும் வயல் வெளிகளும் கொண்ட அழகிய ஊரான அளவெட்டியில் பிறந்தார். இந்த அளவெட்டி பகுதியில்தான் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாய்ந்தோடும் ஒரேயொரு ஆறான வழுக்கை ஆறு உருவாகி அளவெட்டியூடாகச் சென்று கடலில் கலக்கிறது .

இசை வழிபாட்டுக்கும், அதிகமாக விநாயகரை வழிபாடும் பக்தர்களையும் கொண்ட பிரசித்திபெற்ற இடம். அதனைவிட உலகம் போற்றும் பெரும் கலைஞர்களையும், நாதசுவர, தவில் கலைஞர்கள் வித்துவான்களையும் உருவாக்கிய சிறந்த கலைக்கிராமமான அளவெட்டி மண்ணில் பிறந்த ஒரு நாட்டு பற்றாளன்தான் மாமனிதர் சச்சிதானந்தசிவம்.

ஈழத்து ஓவியத் துறையிலும், எழுத்துத் துறையிலும் குறும்பட இயக்கத் துறையிலும் தலைசிறந்து விளங்கிய கலைஞன்.

இவர் சிறந்த எழுத்தாளராகவும், ஆற்றல் மிக்கதொரு கலை இலக்கியப் படைப்பாளியாகவும், சிறந்த அரசியல் சிந்தனையாளராகவும் திகழ்ந்தவர்.

தனது இளமைக்காலம் முழுவதும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் ஓய்வில்லாமல் எழுதிக் கொண்டிருந்தவர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சி நிறுவனமான நிதர்சனம் நிறுவனம் தயாரித்த பல விவரணப் படங்கள், குறும்படங்கள், முழுநீளப் படங்களின் மூலகர்த்தாவாகத் திகழ்ந்தவர். ஒளிவீச்சு சஞ்சிகையின் தொடக்குனர்களில் மிக முக்கிய நபர்களில் இவரும் ஒருவர்.

தமிழீழத் தேசியத் தொலைக் காட்சியை ஆரம்பிப்பதில் முன்நின்று செயற்பட்ட ஒருவர். சிங்கள பௌத்த பேரினவாதத்துடன் தன் எழுத்துகளாலும், ஓவியங்களாலும் மோதிக் கொண்டே இருந்த ஒரு சிறந்த படைப்பாளி .

இவரது சிறந்த படைப்புளுக்காகத் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் பலமுறை பரிசில்களை வழங்கி மதிப்பளித்துள்ளார்.

இலங்கையின் தேசிய விருதுகளில் ஒன்றான - ஆய்வு அல்லது சொந்தப் படைப்பைக் கொண்ட கலை, கலாசார அதி விசேட சாதனைகளுக்கு வழங்கப்படும் விருதான வெள்ளிப் பதக்கத்தில் கலசம் சின்னமாக பொறிக்கப் பட்டிருக்கும் கலாகீர்த்தி விருது. அந்த கலாகீர்த்தி விருதினை வழங்க இலங்கை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் இவரை அழைத்த போது, அவரிடம் இருந்து அந்த விருது தனக்கு தேவை இல்லை எனக்கூறி, விருதினை வாங்க மறுத்து கடிதம் அனுப்பியவர்.

ஞானரதன் அண்ணை என அனைவரும் அன்போடு அழைக்கும் இவர், சிறந்த படைப்பாளி மட்டுமல்ல, ஒரு நல்ல மனிதரும் கூட. நேர்மையும், உயர்ந்த எண்ணங்களும் மிகுந்த எளிமையும் கொண்ட ஒரு ஓவியராகத் தமிழீழத்தில் நடமாடிய ஒரு கலைக்கூடமாக இவர் விளங்கினார்.

தமிழ் மக்களையும், தலைவனையும், போராளிகளையும் ஆழமாக நேசித்த ஒருவராக விளங்கிய ஞானரதன் தமிழ்மக்களின் விடுதலைக்கும், அவர்களின் சுதந்திரத்துக்கும் அயராது பாடுபட்ட ஒருவர். அதுமட்டுமல்லாமல் போர்க் காலத்தில் பெரும் இலக்கிய மற்றும் கள சுமைகளையும் தன் தோளில் சுமந்த மாமனிதர்.

மாமனிதர் விருது என்பது தமிழ் மக்களின் வாழ்நிலை மேம்பாட்டுக்காக, உரிமைக்காக, விடுதலைக்காக, விடுதலைப் போராட்டத்துக்காக அரும்பாடுபட்ட தமிழருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளினால் வழங்கப்பட்ட அதி உயர் விருதாகும்.

விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழு ஈழத்தமிழரின் விடிவுக்காக பாடுபடுபவர்களின் பெயரைத் தேர்ந்தெடுத்து, விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்குச் சிபாரிசு செய்யும். பிரபாகரன் தலைமையில் கூடும் அம்முக்கியக் குழு, தேர்வு செய்யப்பட்டவர் குறித்து பரிசீலித்து, பின்னர் முடிவெடுத்து அவரை விருதுக்கு உரியவராக அறிவிக்கும். அவ்வாறு பிரபாகரனால் மாமனிதர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட சிலரில் ஒருவராக ஓவியர் வை. சச்சிதானந்தசிவம் விளங்குகிறார்.




HANDY WELT
TRAVEL WITH OUR PHONE
Handy Reparatur
Handy Aufladen
Handyvertag
Günstige Sim Karten
Handy-Zubehör
Geld senden
Günstige gebrauchte & neue Handys
வீட்டு மின்சாரக் கட்டணத்தை
கட்டுப்படுத்த வேண்டுமா?
கவலையை விடுங்க!
எங்களை அழையுங்க...
0231
961 26 555
SCAN MICH
1&1
ay yıldız
yourfone
FÜR DICH. FÜR SIE. FÜR ALLE.
O2
Blau
T · ·
stromschalten.de
WESTERN UNION WU
Ria MONEY TRANSFER
Mallinckrodt Str. 70 • 44145 • Dortmund
01630 33 32 33
0231 981 89 888
handyweltdo20@gmail.com

# மீட்க முடியாத நாடுகளின் பட்டியலில் இலங்கை








"அநேகமான ஏற்றுமதிகளுக்குத் தீர்வைகளிலிருந்து விலக்களிக்கின்ற ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து இலங்கை, 2017 மே மாதத்தில் மீண்டுமாக பெற்றுக் கொண்டது. இந்த வெற்றிகரமான நகர்வுகள் முன்னேற்றத்தைக் காண்பிப்பதாக இருப்பினும், மிகமுக்கியமான சீர்திருத்தங்கள் பின்தங்கிய நிலைக்குள்ளாகியுள்ளதாக இந்த அறிக்கையைத் தயாரித்தவர்கள் அவதானத்திற்கு உட்படுத்தியுள்ளனர்.

இவற்றில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கான அனுமதிகளை ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொடுக்கும் ***One Step Shop*** முதலீடுகளுக்கான ஏதுநிலை மற்றும் வர்த்தகம் தொடர்பான சீர்திருத்தங்கள் ***Srilankan Airways*** போன்ற அரசிற்கு சொந்தமான நிறுவனங்கள் தொடர்பான சீர்திருத்தங்கள் ஆகியன அடங்கும். இதற்கு மேலதிகமாக கடன் முகாமைத்துவ நிகழ்ச்சி நிரல் மற்றும் கணக்காய்வாளர் சட்டத்தை நிறைவேற்றல் ஆகிய விடயங்களில் அர்த்தப்பூர்வமான முன்னேற்றம் இன்னமும் காணப்பட வேண்டியுள்ளது..."

மேலுள்ள இந்த அறிக்கை, 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உலக வங்கியினால் இலங்கை பற்றி வரையறுக்கப்பட்ட ஓர் பத்தியாகும். சரியாக நான்கு வருடங்களுக்குப் பிறகு, இலங்கையின் இன்றைய நிலை பற்றிய பொருளியல் வல்லுநர்களின் கருத்தைக் கீழுள்ள பந்தியில் காணலாம்.

"தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (தேநுவிசு 2013=100)

*(ஆண்டிற்கு ஆண்டு) மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2021 யூனில் 6.1 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. இதற்கு, 2020 யூனில் நிலவிய உயர்வான தள புள்ளி விபரத் தாக்கம் காரணமாக அமைந்தது. அதேவேளை, உணவுப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2021 மேயின் 10.3 சதவீதத்திலிருந்து 2021 யூனில் 9.8 சதவீதத்திற்குக் குறைவடைந்ததுடன் உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு), 2021 மேயின் 2.5 சதவீதத்திலிருந்து 2021 யூனில் 2.9 சதவீதத்திற்கு அதிகரித்தது." ( இலங்கை வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவு)*

இலங்கை அரசாங்கம் வரலாற்றில் முதல் தடவையாக மீள முடியாத வெளிநாட்டு கடன் சுமையில் சிக்கிக் கொண்டு இருக்கின்றது. இந்நிலையில் அடுத்தடுத்து எதனை விற்க கோத்தபாய அரசு முற்பட்டிருக்கிறது என்பதையும் காணலாம். குறிப்பாக இலங்கையின் வெளிநாட்டு கடன் மட்டும் ***$ 89 billion*** என்கிற நிலையை எட்டி விட்டது. அதே போல சர்வதேச கடன் மதிப்பிட்டு நிறுவனங்கள், கடன்களை மீள செலுத்தும் ஆற்றலை இழக்கும் அபாயத்தை எதிர்கொள்ளும் நாடுகளில் ஒன்றாக இலங்கையை மதிப்பீடு செய்து இருப்பதால், மேலதிக கடன்களை பெற்றுக் கொள்ளுவதிலும் நெருக்கடிகள் ஏற்பட்டு வருகின்றன.

இது தவிர, மத்திய வங்கி மோசடியில் இழக்கப்பட்ட ***$ 268 million ,*** ***Greek junk bonds*** முதலீடுகளில் ஏற்பட்ட ***$6.6 million*** நட்டம், ***MIG*** மிகையொலி விமான கொள்வனவு ஊழல் **$6 million,** சீனி கொள்வனவு மோசடியால் ஏற்பட்ட இழப்பு ***$ 83 million, BMW*** கார் இறக்குமதி வரி மோசடி ***$ 84 million*** என வரையற்ற ஊழல் மோசடிகளால் இலங்கையின் நிதி நிலவரம் ஆபத்தானக் கட்டத்தை நெருங்கி இருக்கின்றது.



இதுமட்டுமில்லாது அரசியல் நோக்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகம் , சர்வதேச விமான நிலையம் போன்ற பாரிய முதலீடுகள் தோல்வியடைந்த நிலையில் இலங்கை அரசாங்கம் தனது வருமானத்தை விட ஆண்டு தோறும் மீள செலுத்த வேண்டிய கடன் அதிகரித்து இருக்கின்றது. அண்மையில் இலங்கையில் சந்திப்புகளை நடத்திய அமெரிக்கத் தூதுவர், சிசிசிசி என்ற நிறுவனம் அமெரிக்காவால் தடைசெய்யப்பட்ட நிறுவனம் என்றும், இதுவே இலங்கையில் கட்டுமானங்களை மேற்கொள்கிறதென்றும் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னணியில் ***Private Public Partnership (PPP)*** என்கிற திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்கள் , கட்டடங்கள் மற்றும் காணிகளைத் தனியாருக்கு விற்கும் நிலைப்பாட்டை கோட்டாபயா இராசபக்சே நிர்வாகம் எடுத்து இருக்கின்றது. மேற்குறித்த கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகளுக்காக ***Selendiva Investments Limited*** என்கிற நிறுவனம் ஒன்றை உருவாக்கியுள்ள கோட்டாபய ராஜபக்சே நிர்வாகம் மூன்று கட்டத்தின் கீழ், கொழும்பின் பெருமளவான பிரதேசத்தை விற்கும் தீர்மானத்தை எடுத்து இருக்கின்றது.

அரசாங்கம் மேற்கூறிய இடங்களை தனியார்மயப்படுத்த தீர்மானித்து உள்ள நிலையில் பெருமளவான இடங்களை ***China Communications Construction Company (CCCC)*** என்கிற சீனா நிறுவனம் வாங்குவதற்கு முன்வந்து இருக்கின்றது . ஆனால் இந்த நிறுவனம் அமெரிக்கா அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டு இருப்பதால் அவர்களது துணை நிறுவனமான ***CHEC Port City Colombo (PVT) LTD*** என்ற சீன நிறுவனத்தின் ஊடாக கொடுக்கல் வாங்கல்களை செய்ய முயற்சித்து வருகின்றார்கள்.

இது தவிர, சீனா அரசின் உதவியுடன் கட்டப்பட்ட தாமரை கோபுரம் நட்டம் அடைந்துள்ள நிலையில், மீண்டும் சீனா நிறுவனத்திடம் ஒப்படைக்க தீர்மானிக்கப் பட்டுள்ளது. இந்நிலையில் கொழும்பின் பெரும்பகுதி குறிப்பாக ***Colombo 1 and Colombo 2*** ஆகியன சீனா நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றால், இலங்கையின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக சீனா எதிர்வரும் பொதுத் தேர்தல் காலத்திற்கு முதல் உருவாகும்.

இலங்கையின் மத்திய அரசாங்கத்தின் கடன் மிகவும் உயர்வானதாக காணப்படுகின்றது. அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 83 வீதமாக இது காணப்படுகின்றது. நாடு உயர் நடுத்தர வருமான நாடு என்ற நிலையை நோக்கி நகரும் நிலையில், அது வர்த்தக அடிப்படையில் அதிக செலவு மற்றும் ஆபத்துக்களை உள்ளடக்கிய கடன்களைப் பெறுகின்றது.

வெளிநாட்டு நாணயங்களை அடிப்படையாகக் கொண்ட பெரும்பாலான கடன்கள் சர்வதேசப் பிணைகள், இலங்கையின் அபிவிருத்தி பிணை முறிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சந்தை கடன்களாகக் காணப்படுகின்றன. இது 2017 இல் 53 வீதமாக காணப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் இது மூன்று வீதமாக காணப்பட்டது.

2019 முதல் 2023 மற்றும் 2025 முதல் 2028 வரையிலான காலப்பகுதியில் யுரோ பிணை முறியில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய முழுமையான தொகை 12.15 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது இலங்கைக்கு புதிய விடயம் என தெரிவித்துள்ள ***SLDU*** இது இலங்கையை மீளசெலுத்தும் நெருக்கடிக்குள் சிக்க வைக்கலாம் எனவும் தெரிவிக்கின்றது.

இந்த ஆபத்திலிருந்து இலங்கை மீளமுடியா விட்டால், இலங்கையை இனி மீட்கமுடியாத நாடுகளின் பட்டியலில் உலகம் அடைத்துவிடக்கூடும்.

# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

ENESAR N.S.R. என்எஸ்ஆர்

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

## மண்மணம் மாறாத சுவைதரும்
## தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்




ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

**www.jaffnastores.com**
**info@jaffnastores.de**

**Tel. - 0521 174794**
**Mobile - 01732807906**

**Feilenstraße 8**
**33602 Bielefeld**



**DORTMUND மாநகரத்திலே**
**தாயக மரக்கறிகள், பழவகைகள் மற்றும்**
**உணவுப் பொருட்களை மொத்தமாக**
**பெற்றுக் கொள்ள நாடுங்கள்**

StaR-Impex




Rabeena
Since 1986
We've Mastered Taste

Aachi
The Mother of Good Taste

BTM

Double Horse
Bringing Health to Life

பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

**Lebensmittel Grosshandel e.K.**

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net


TRS
ASIA'S FINEST FOODS




MDH · Laziza International · Cock Brand · DAAWAT The Finest Basmati · Elephant House · Shan · AKASH Basmati · Rubicon · Tilda Legendary Rice

Nestlé · PG tips · Niru Brand · AROY-D · MTR · AASHIRVAAD · Pillsbury · PATAK'S Original · Laila

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?





## காசி ஆனந்தன் கூட்டணிக் கூட்டாளிகளுக்கான பதிவு.

1956 ல் தனிச் சிங்கள மொழிச் சட்டத்தை நண்டெழுத்து நமக்கு வேண்டாம் எனத் தமிழ் எழுச்சிக் கவிகதைகளை எழுதிக் குவித்து தமிழரசுக் கட்சியின் வார இதழ் சுதந்திரன் பத்திரிகையால் 'உணர்ச்சிக் கவிஞர் ' என இன்றுவரை பேசப் படும் உங்களை நான் அறிவேன். இதே தனிச் சிங்கள ச் சட்டத்தால் வேலை இழந்து கொழும்பு கொம்பனித் தெரு என அழைக்கப்படும் 'அடிமைத் தீவு' எனப் பொருள்படும் (ஷிறீணீஸ்மீ மிஉறீணீஸீபீ)ல் உங்களின் அறையில் வந்து பார்த்துப் பேசி இருக்கிறேன்.

பின்னர் புலிகளின் சீருடையுடன் பலிகளின் வாகனத்தில் பவனி வந்த நாட்களில் 1987ல் பன்னிரு வேங்கைகளின் மரண நிகழ்வில் பாத்திருக்கிறேன். ஆனால் பேசியதில்லை. பின்னர் 1991ல் இந்தியாவில் வீட்டுச் சிறையில் கூண்டுக் குயிலாக இருந்த பொழுது பார்க்க முனைந்தேன். திரு.ஈழவேந்தனை மட்டும் பார்க்க முடிந்தது.

அவர் இருந்த இல்லத்திலும் தமிழகக் காவல் துறைக் காவலர் இருந்தனர். இவற்றை நான் இங்கு குறிப்பிடக் காரணம் அன்று எப்படி எல்லாமோ இருந்த கர்ம வீரன் இன்று இப்படியா'இரண்டாவது வட்டுக் கோட்டைப் பிரகடனம் 'கொண்டு வர வேண்டிய நிலை ஏன் வந்தது என்பதை என்னால் உணர முடிகிறது.

அந்த உண்மை மட்டும் அல்ல வேறு எந்த உண்மையும் பேசமுடியாத நிலையில் இன்று தமிழ் இன உணர்வாளர்கள் உள்ளனர். வயதானால் ஓய்வு எடுப்பதில் தவறே இல்லை. ஆனால் நிறம் மாறி குணம் மாறி பச்சோந்தியாகும் நிலைதான் பாவமானது பரிதாபமானது. அப்படிப் பார்க்கும் நிலையை ஒரு புலி வீரன் செய்யவே மாட்டான். அப்படியானால் புலிகளின் சீருடை எப்படி அணிந்து அன்று புலிகளுடன் ஊர்திகளில் பவனி வந்தீர்கள்?

அதே புலிகள் உயிர்த் தியாகம் செய்து போரடியது யாருக்காக ?1976ல் எடுத்த வட்டுக் கோட்டைப் பிரகடனம் எதற்காக எடுக்கப் பட்டது என்கிற நினைப்பு எப்படி உங்களிடம் இல்லாமல்

*போனது? முன்னாள் இந்திய வெளி உறவு அமைச்சர் ஜோஜ் பெர்னாண்டஸைப் பல முறை பார்த்துப் பேசியதாக பல முறை செய்திகளில் படித்துள்ளேன்.*

*அப்படிப் பேசிய போதெல்லாம் 13வது திருத்தச் சட்டத்தை அமுலாக்கச் சொல்லிக் கேட்டீர்களா? 1985 ல் பூட்டான் தலைநகர் திம்புவில் இந்திய அரசின் தலைமையில் நடைபெற்ற இலங்கை அரசுடன் நடைபெற்ற பேச்சில் வைக்கப் பட்ட கோரிக்கை வட்டுக் கோட்டைப் பிரகடனத்தின் அடிப்படையிலா அல்லது 13வது திருத்தச் சட்டத்தை நடைப் படுத்தவா?*

*அன்று இந்திய அரசு அன்ரன் பாலசிங்கத்தையும் நடேசன் சத்தியேந்திராவையும் சிறைப்படுத்தி நாடு கடத்தியது அங்கே பேசப் பட்டது 13வது திருத்தச் சட்ட அமுலாக்கம் பற்றியதா?*

*அன்று கைதான மறவன்புலவு சச்சிதானந்தன் பேசாத தமிழ் ஈழமா*




*நீங்கள் பேசிவிட்டீர்கள்? இன்று அவர் ஈழத்தில் பா.ஜ.க. அரசியல் செய்கிறார் ஏன?*

*அன்று தனித் தமிழ் ஈழமே ஈழத் தமிழ் மக்களுக்கான ஒரே உறுதியான முடிவான தீர்வு என் அரசியல் பேசியவர்கள் உங்களைப் போன்ற புத்தி ஜீவிகள் எனத் தப்பாகத் தமிழ் மக்கள் மட்டும் அல்ல என்போன்ற இலட்சக் கணக்கான இளஞர்களும்தான் என்பதை விடுதலைப் போராட்டக் குழுக்களின் தோற்றமும் அழிவும் ஏற்படக் காரணமான அரசியல் தலைவர்களை வரலாறு மன்னிக்க முடியும் என்றால்*






யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
2021ஆம் ஆண்டின் புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும் அனைத்து கவறிங்
நகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44
Mob. : 0173 1937 325
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

CENTURY
TRAVELS GMBH

Rheinische Strasse 29
44137 Dortmund

15 YEARS OF SERVICE

**Frankfurt to Colombo**
**ab 669€**
**40kgs**

*Qatar Airways*

**Hotel ( Level 1 Certified )**
**Corona schutz ( Insurance)**
**Transfer to Hotel**
**PCR -Test**
**ETA Visa**

இலங்கையின் எந்தப் பகுதிக்கும்
வாகன வசதி செய்து தரப்படும்.



அனைத்து வசதிகளுடன்...

**Fon : 0231 5574 319**
**Fon : 0231 5896 557**
**Mob : 017621682149**

உங்களைப் போன்ற புத்தி பேதலித்த புத்திஜீவிகளும் மன்னிக்கப் பட வேண்டியவர்களா?

யாழ்ப்பாணத் தொகுதியில் வெற்றி பெற முடியாமல் தவித்த அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வாவின் பக்க வாதத்தால் சிந்திக்கவும் செயல்படவும் முடியாமல் நடைப் பிணமாகிவிட்ட உள உடல் குறையை மோசடியாக அரசியல் மேடைகளில் 'ஈழத்துக் காந்தி' என்று நடமாடும் பொம்மைபோல அவர் சொன்னார் என மக்களை ஏமாற்றி அரசியல் நடத்தியவர்கள் அமிர்தலிங்கமும் அவரது மனைவி மங்கையர்க்கரசியும் என்பதை அறியாதவரா நீங்கள்.? அமிர்தலிங்கத்தின் அரவணைப்பால் மட்டக்களப்புத் தொகுதியில் போட்டி இட்டு கட்சியின் பழம் பெரும் தலைவர்களில் ஒருவரான செ. இராசதுரையை கட்சியிலிருந்து வெளியேற வைத்த உங்களின் சாதனை என்பதை மறுக்க முடியுமா?

இன்று புலிகளையும் தனித் தமிழீழக் கோரிக்கையையும் போர்க் குற்ற விசாரணையையும் எதிர்த்து அரசியல் நடத்தும் சம்பந்தன், சுமந்திரன்,மாவை, சிறிதரன் போன்றவர்களின் வழியில் நீங்களும் பயணிப்பது எமக்கு ஒன்றும் அதிசயம் இல்லை. எட்டப்பர் வரிசையில் உள்ள தமிழக அரசியல் கட்சிகளின் தேர்தல் வெற்றிக்காக நீங்கள் உழைப்பது மிகவும் மெச்சத் தக்கது.அடிமை அகதி வாழ்வில் பிளைப்பு வாதம் உங்களிடம் உள்ளது. செய்யுங்கள் நன்றாகவே செய்யுங்கள்.ஆனால் ஈழத் தமிழர்களின அரசியலை மட்டும் செய்யாதீர்கள்.

தமிழ் தேசிய அரசியலையும் தமிழீழ விடுதலைப் போரையும் தமிழகத்திலும் உலக நாடுகளிலும் அழியாமல் எடுத்துச் செல்லும் செந்தமிழன் சீமானையும் அவர் வழி நடத்தும் நாம் தமிழர் கட்சியையும் அழிக்கும் போட்டி அரசியலை தொடர்ந்து செய்யும் வரை நீங்களும் எமது பகைவர்தான்.






# ஆப்கானிஸ்தானும் அதன் அவலங்களும்

ஆதவன்

ஆப்கானிஸ்தானின் அதிபர் அஸ்ரஃப் கானி நாட்டை விட்டு ஓடி, உஸ்பெஸ்கிஸ்தானில் அடைக்கலம் பெற்று விட்டதாக முதலில் வெளியான செய்திகள் கூறின. அவர் இப்பொழுது ஐக்கிய அரபுகள் நாட்டில் அடைக்கலம் அடைந்து விட்டதாக செய்திகள் கூறின்றன.

அவர் இனி என்ன செய்வார்? யாருக்கான அரசியலைச் செய்வார்? என்பதைப் பொறுத்தே ஆப்கானும், ஆப்கானிஸ்த மக்களின் எதிர்காலமும் தங்கி உள்ளது. அவருடைய அமைச்சர்களில் ஒருவரான பெண் பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியில் கடைசி வரை இருப்பேன் எனச் சொல்லி வந்தவர், தான் மட்டும் நாட்டைவிட்டுப் போவதைச் சொல்லாமல் போய் விட்டாரே என அங்கலாய்த்துள்ளார்.


அமெரிக்காவின் 20 வருடங்களுக்கும் அதிகமான ஆதிக்க வெறி, இன்று ஆப்கானிஸ்தானில் அடங்கி நிற்கிறது. ஆப்கானிஸ்தானின் பூர்வக் குடிகளின் விடுதலைப் போராட்டம் தலிபான் அமைப்பினால் வெற்றி பெற்றுள்ளது.

ஆகஸ்ட் 15, 2021ல் தலிபான்கள் 165 மாவட்டங்களில் தலிபான்கள் 104 மாவட்டங்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. அமெரிக்கப் படைகள் வாபஸ் ஆகும் முடிவை எடுத்த பின்னர் முன்னேறிய தலிபான் படைகள் ஆகஸ்ட் 15ல் மேலும் எஞ்சிய 41 இடங்களையும் தனது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டது.

அமெரிக்கப் படையால் பயிற்சி




மார்க் மிலே


அஸ்ரப் கானி

அளிக்கப்பட்ட அரசின் படைகள், தலிபான்களின் தாக்குதல்களை எதிர் கொள்ள முடியாமல் வேகமாகப் பின்வாங்கியதை அமெரிக்க இராணுவத் தளபதி மார்க் மிலே பின் வருமாறு பேட்டி அளித்திருந்தார்.

'ஆப்கான் பாதுகாப்புப் படைகளுக்கு தமது நாட்டைப் பாதுகாக்க தலைமைப் பொறுப்பை ஏற்க வல்ல மன உறுதிக்குத் தேவையான பயிற்சியும், வல்லமையும் பெற்றிருந்தனர்.

நானோ வேறு எவராயினும் இத்தகைய பாரிய படை 11 நாட்களில் வீழ்ச்சி அடையும் எனப் பார்க்கவில்லை. அமெரிக்க இராணுவமான நாங்கள் எல்லா அமெரிக்கக் குடிமக்களையும் ஆப்கானத்திலிருந்து வெளியேற்றுவது என்பதே எமது முதல் குறிக்கோள், ஏற்கனவே 5,000 மக்களை மீட்டு விட்டதாகவும்', குறிப்பிட்டார்.

காபுல் நகரும் தலிபான்களிடம் வீழ்ந்ததை அடுத்து, அங்குள்ள மக்களில்



மிகப் பெரும் தொகையினர் நாட்டை விட்டு வெளியேற முண்டி அடித்துப் போராடுகிறார்கள். இதில் காட்டிக் கொடுப்பவர்களும், சந்தர்ப்பவாதிகளும் வசதிகளாலும், மேலை நாட்டு கலாச்சாரத்தாலும் கவரப்பட்ட கனிசமான தொகையினரும் காணப்படும் சாத்தியப் பாட்டை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. காபுல் விமான நிலையத்தில் அப்படி ஓடித் தப்ப முயலும் மக்கள் கூட்டத்தின் காட்சியை ஒளிப்படம் தருகிறது.

1980ல் ரஷியா ஆப்கானிஸ்தானத்தைத் தனது படையை அனுப்பி கைப்பற்ற முனைந்த நாள் தொடக்கம், ஆப்கானிஸ்தான் உலகப் பிரச்சினைகளின் மையப் புள்ளியாக மாறிவிட்டது. ரஷியாவை விரட்ட அமெரிக்கா போராடிக் கொண்டிருந்த புரட்சிப் படைகளுக்கு உதவி வழங்கி, அதன் மூலம் ஒசாமா பின்லாடனை வளர்த்துப் பின்னர் அவன் அமெரிக்காவின் கட்டுப்பாட்டை உடைக்க, அவனை உலக பயங்கரவாதி எனப் பிரகடனப்படுத்தி, அவனைத் தன்னிடம் ஒப்படைக்க




ஆப்கானை வற்புறுத்தியது.தலிபான்கள் மறுத்தனர். பின்னர் பின்லாடன் பாக்கிஸ்தானில் இருப்பதை அறிந்து அவனைக் கொன்றது.

ஒசாமா பின்லாடனைத் தொடர்ந்து தலிபான்கள் புரட்சியைத் தொடர்ந்தார்கள். முயற்சியில் சற்றும் சளைக்காத அமெரிக்கா, காபூலில் ஒரு பொம்மை அரசை ஏற்படுத்தி கோடி கோடியாகச் செலவு செய்தும், தோல்வியுடன் மக்கள் புரட்சியை முறியடிக்க முடியாமல் இப்பொழுது வெளியேறுகிறது. ஆனால், உலக அளவில் இஸ்லாமியப் பயங்கரவாதம் என்கிற பிரச்சாரத்தின் மூலம் ஆப்கானைக் கைப்பற்றி, அங்கே குவிந்து கிடக்கும் கனிம வளங்களைக் கொள்ளை அடிக்க அது என்ன வேண்டுமானாலும், யாரை வைத்தும் எதையும் செய்யும் என்பதை இன்று உலகமே அறியும்.

இந்தப் புரட்சி ஆப்கானிய மக்களின் தாயகம், மொழி, மதம், கலாச்சாரம், சுய உரிமை என்கிற கோணத்தில் இன்றைய உலக நாடுகளின் அரசுகள் பார்க்கத் தயாராக இல்லை. திறந்த வெளி இயற்கை வளச் சுரண்டல்களை நோக்கமாகக் கொண்ட வல்லரசுகளின் வேட்டைக் காடாக வலிமை அற்ற, வறிய உலக நாடுகளைப் பார்க்கின்றன.

தலிபான் அரசு பெண்களைத் துன்புறுத்தாது. அவர்கள் வெளியல் சுதந்திரமாக நடமாடலாம், வேலை செய்யலாம் எனத் தலிபான் பேச்சாளர் அறிவித்துள்ளார். ஆனால், சரியத் சட்ட விதிகள் அமுலாக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்த நிபந்தனைதான் பலரையும் சந்தேகிக்க வைத்துள்ளது.

மேல் நாட்டுக் கலாச்சாரம், நவீன சந்தைக் கலாச்சாரம் மூலம் உலக மக்களைக் கவர்ந்து பொருளாதாரச் சுரண்டலை வெற்றிகரமாக உலக அரசுகள் செய்து வருகின்றன என்பதற்கு, கோவிட் 19 கொரோனா நோய்த் தொற்று மிகச் சிறந்த உதாரணம் .வருமானமும், உழைப்பும் இழந்து, இறந்து மடியும் மக்களைப் பற்றி எந்த நாடும், எந்த நாட்டு ஆட்சியாளரும் உண்மையான கவலை கொள்வதாகத் தெரியவில்லை.



# மகிழ்ச்சியோடு வெற்றியைத் தேடு

நந்தவனம் சந்திரசேகரன்

“மகிழ்ச்சியான இதயமுள்ளவன், இடைவிடாத விருந்தைப் பெற்றவன்” என்று பைபிளில் சொல்லப் பட்டுள்ளது. நாம் மகிழ்ச்சியோடு தான் வாழ்கிறோமா? மகிழ்ச்சியோடு தான் வெற்றியைத் தேடுகிறோமா? பெரும்பாலானவர்களிடம் இருந்து வரும் பதில் “எங்க சார் மகிழ்ச்சியா... வாழ்வது தினம் ஒரு பிரச்சனயைச் சந்திக்க வேண்டி இருக்கே” இப்படித்தான் பதில் தருவார்கள்.

வாழ்க்கை பற்றிய பயத்தினாலேயே மகிழ்ச்சியைப் பற்றி சிந்திக்காமல் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இன்றைய பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் பொருளாதாரத் தேடலுக்காக ஓடிக் கொண்டே இருக்கிறோம்.

நிறையப் பணம், வீடு, வாசல் இருந்தால் மகிழ்ச்சியாக வாழலாம் என்று தான் ஓடுகிறோம். இருக்கின்ற வாழ்க்கையில் மசிழ்ச்சிக்காக நேரம் ஒதுக்கிறோமா? ஆடம்பரமான வாழ்க்கையின் மீது கொண்ட காதலால் மகிழ்ச்சியைத் தொலைத்து விட்டு அவசரமாக ஓடுகிறோம். வசதியான வாழ்க்கை வாழக்கூடாதா? என்ற கேள்வி இங்கே எழலாம். மனிதனாகப் பிறந்த எல்லோருக்குமே இந்த ஆசை இருக்கத்தான் செய்யும். விலங்குகள் நாளைக்கு வேண்டும் என்று சேர்த்து வைப்பதில்லை. இன்று என்ன கிடைக்குமோ, அதுவே நாளையும் கிடைக்கும் என்று நம்புகின்றன. மனிதன் மட்டுமே நாளைக்கு வேண்டும் என்று சேர்த்து வைக்கிறான் .இதனால் இன்றில் இருக்கும் மகிழ்ச்சியைத் தொலைத்து விடுகிறான்.

இந்த வாழ்க்கை என்பது ஒரு முறைதான். நாளை என்ன நடக்கும் என்று யாருக்கும் தெரியாது. நாளை ஒன்று இருக்குமா? என்று கூட தெரியாது. ஒரு பூகம்பம் வந்தால் எல்லாம் முடிந்து போய் விடும்.

பொருளாதரத் தேடலுக்காக ஓடுகிறோம். பல முயற்சிகள் செய்கிறோம். அதை மகிழ்ச்சியோடு செய்கிறோமா? என்னாகுமோ, ஏதாகுமோ என்று ஒரு விதமான பயமும், பதற்றமும் மனதுக்குள் இருந்து கொண்டே தானே இருக்கிறது.

இந்த பயமும், பதற்முமே மகிழ்ச்சியைக் கெடுத்து விடுகிறது. வெற்றியோ, தோல்வியோ எது வந்தாலும் ஏற்றுக் கொள்வோம் என்று தெளிவான முடிவுடன் செயல்படுபவர்கள் மிகக் குறைவு தான். பயத்தைத் தேக்கி வைத்து தடுமாறுவர்பவர்களே இங்கே அதிகம்.

அந்த ஊர் முழுவதும் ஒரே பரபரப்பு. “புத்தர் வந்திருந்தார்” ஊரில் ஒரு விவசாயி. அவனுக்குப் புத்தரைப் பற்றி எதுவும் தெரியாது. ஆனால், எல்லோரும் பேசிக் கொள்வதை வைத்து அவர் பெரிய மகானாக இருக்க வேண்டும் என்று ஊகித்தான்.

ஆனால், புத்தர் எங்கே இருக்கிறர், அவரை எப்படி தரிசிப்பது? என்று விசாரித்தான்.

“நம்முடைய ஊர் எல்லையில் ஒரு காட்டாறு ஓடுகிறது அல்லவா? அந்த ஆற்றின் மறுகரையில் தான் புத்தர் இருக்கிறார்” என்றனர்

விவசாயி நடுங்கிப் போனான். அந்த காட்டாற்றின் முரட்டுத்தனமான வெள்ளம் எப்பேர்பட்ட பலசாலியையும் உருட்டிப்புரட்டி விழுங்விடக் கூடியது. அதைத் தாண்டி புத்தரை எப்படி சந்திப்பது? என்று யோசித்தான்.

அவனுடைய தவிப்பைப் பார்த்து



யாரோ கிண்டலாகச் சொன்னார்கள். "உனக்கு தான் புத்தரைப் பார்க்கணும்னு ரொம்ப ஆசை இருக்கே. நீ நினசச்சா தண்ணி மேலயே நடந்து போகலாம்" என்று அவர்கள் சொல்லி முடித்தது தான் தாமதம். அந்த விவசாயி பரபரவென்று காட்டாற்றை நோக்கி ஓட ஆரம்பித்தான். தண்ணீர் மீது நடந்து சென்று புத்தரைத் தரிசித்து விட்டான்.

எல்லோரும் அசந்து போனார்கள். படிப்பறிவில்லாத இந்தக் காட்டான் தண்ணீரின் மீது நடந்தது எப்படி? அவன் என்ன மந்திரவாதியா?

புத்தர் சொன்னார். "இது மாயமோ, மந்திரமோ இல்லை. நம்பிக்கை மட்டுமே இருந்து விட்டால் எதுவும் சாத்தியமே" என்றார்.

அந்த விவசாயிக்குப் புத்தரைச் சந்திக்க வேண்டும், ஆசி பெற வேண்டும் என்ற மகிழ்ச்சி மட்டுமே மனதில் இருந்ததால், காட்டாறு பற்றிய பயம் இல்லாமல் போய்விட்டது. இது போலத்தான் நம்முடைய வாழ்க்கையிலும் எது நடந்தாலும் அதைக் கண்டு பயப்படாமல், எதனால் இந்த பயம் வருகிறது? அதை எப்படிக் கடந்து போவது? என்று சிந்திக்க வேண்டும்.

இங்கே கடினம் என்று நினைத்தால் வயிற்றுக்கு சாப்பிடுவது கூட கடினம்தான். எதிலும் வெற்றி பெற வேண்டும் என்று நினைத்தோமானால் முதலில் மகிழ்ச்சியான மன நிலையை ஏற்படுத்த வேண்டும்.

காலையில் எழும் போதே இன்றைய பொழுது மகிழ்ச்சியாக இருக்கும் என்ற மனநிலையுடன் எழ வேண்டும். ஒரு பொழுது விடியும் போது, நம்முடைய மனதில் என்ன மாதிரியான எண்ண அலையுடன் எழுந்திருக்கிறோம் அதே பிரதிபளிப்புத்தான் அந்த நாள் முழுவதும் இருக்குமாம்.

காலையில் எழும் போதே பதற்றமாக இருந்தோம் என்றால், சின்னதாக ஒரு தவறு நடந்தால் கூட தேவையில்லாமல் பெரிதாக்கிப் பதற்றமடைவோம். இப்படி தினம் தினம் பதற்றம் அடைந்தோம் என்றால் அது மன அழுத்தமாக மாறிவிடும். மன அழுத்தம் வந்தால் அதோடு பலவிதமான உடல் உபாதைகளும் வந்துவிடும்.

நீண்ட நாள் வாழ வேண்டும் என்ற ஆசையிருந்தால் மட்டும் போதாது. அதற்கு மகிழ்ச்சியானச் சூழல் வேண்டும். "ஒருவன் சிரிக்கும் போதெல்லாம் மரணம் தள்ளிப் போடப்படுவதாக" இத்தாலி பழமொழி சொல்கிறது.

குழந்தைகளைக் கவனித்துப் பாருங்கள். முகத்தில் எப்போதும் மகிழ்ச்சி இருக்கும். ஏனென்றால் குழந்தைகளுக்கு எதிர்காலம் பற்றிய கவலையோ, பயமோ இல்லை. அதற்காக குழந்தைத்தனமாக இருக்க வேண்டுமா? என்று கேட்காதீர்கள். குழந்தையின் மனநிலையில் எது பற்றிய கவலையும் இல்லாமல் என்ன நடந்தாலும் கடந்து போவோம் என்று மகிழ்ச்சியோடு தேடுங்கள் உங்கள் வெற்றியை.






BOX
SARPATTA
BEAST
£149
€99
40+ SPORTS CHANNELS AVAILABLE
MANY MORE...
WITH OVER 300 CHANNELS & 5000 MOVIES
24X7 SALES & SUPPORT
Malayalam 20+ CHANNELS
Hindi 20+ CHANNELS
Telugu 20+ CHANNELS
Punjabi 20+ CHANNELS
REACH OUR DISTRIBUTORS
OFFICE : 0044 2037 690498
UK : 0044 7882274040 0044 7723229209
SWISS : 0041 4455 14321
NETHERLANDS, BELGIUM, LUXEMBOURG : 0031 621604168
FRANCE : 0033 782775490 0033 977195911
GERMANY : 0049 17670334213, 0049 62063052893
ITALY : 0039 3510257812
DENMARK : 0045 20829548 0045 20718780


7th ANNIVERSARY CELEBRATIONS
ANNIVERSARY
Dortmund மாநகரில் மளிகை உலகின்
BIGG BOSS
TKS BEST FOODS
SCAN ME
7 ஆம்
ஆண்டுக்கான
விழாக்கால
பிரமாண்ட
விற்பனை
MEGA Sale
அக்டோபர்
11ம் திகதி
முதல்
16ம் திகதி
வரை
உங்களின் அன்றாட தேவைகளுக்கும் உங்களின்
வேண்டுகோளுக்குமிணங்க தரம் என்ற தாரக
மந்திரத்துடன் நியாயமான விலைகளுடன்
பலசரக்குப்பொருட்கள் மரக்கறி வகைகள் மற்றும்
மீன் வகைகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
5000€ பெறுமதிக்க
குழுக்கல் முறையிலான
பரிசில்கள்
Rheinische Str.79-44137-Dortmund
tksbestfoods
0049 231 950 468 83
www.tksbestfoods.de
tks-bestfoods@web.de